பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 21, செவ்வாய்க்கிழமை 06.12.2016 கதிர் 31

## தமிழகத்தில் 7 நாள் துக்கம்

சென்னை,டிசெ.06

தமிழகமுதல்வரின்மறைவை ஒட்டி தமிழகத்தில் 7 நாள்கள் அரசுமுறைதுக்கதினம்அனுஷ்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள்களுக்கு பாடசாலைகள்,அலுவலகங்களுக்கு விடுமுறை என அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

# ஜெயலலிதா காலமானார்

## இன்று மாலையே இறுதிக்கிரியைகள்




சென்னை, டிசெம்பர் 06

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா (வயது -68) நேற்று நள்ளிரவு 11.30 மணிக்கு காலமானார்.

சென்னை அப்பலோ மருத்துவமனையில் கடந்த 73 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று நள்ளிரவு அங்கு காலமானதையடுத்து சற்று நேரம் கழித்து இன்று அதிகாலை 12.15 மணியளவில் அவரது பூதவுடல் போயஸ் கார்டனில் உள்ள அவரது ‘வேதா இல்லம்’ வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று பகல் மக்கள் அஞ்சலிக்காக சென்னை ராஜாஜி மண்டபத்தில் அவரின் பூதவுடல் வைக்கப்படும். இன்று மாலையே இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் அடக்கம் செய்யப்படும் என அதிகாலை வெளியான செய்திகள் தெரிவித்தன. பக்கம் 20 »

## பன்னீர்ச்செல்வம் புதிய முதலமைச்சர்



### அதிகாலை பதவியேற்பு

சென்னை, டிசெ.06

செல்வி ஜெயலலிதாவின் மறைவை அடுத்து தமிழகத்தில் புதிய முதல்வராக ஓ.பன்னீர்ச் செல்வம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இன்று அதிகாலையில் அவர் புதிய முதல்வராக ஆளுநர் வித்தியாசாகர் ராவ் முன்னிலையில் ஆளுநர் மாளிகையில் பதவியேற்றார். 31 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

ஜெயலலிதாவின் மறைவை அடுத்து நேற்று நள்ளிரவில் – அதாவது இன்று அதிகாலை – 12 மணிக்குப் பின்னர் ஆளும் அ.தி.மு.க. சட்டமன்றக் குழுவின் கூட்டம் அவசரமாகக்கூடியது. அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அ.தி.மு.க.வின் 137 சட்டமன்ற பக்கம் 20 »

### இந்தியத் தலைவர்கள் இரங்கல் செய்தி

சென்னை, டிசெ.06

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு இந்தியத் தலைவர்கள் பலரும் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உட்படப் பலர் அவரது மறைவுக்கு இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

### பதவியில் இருக்கும் வேளையில் காலமான மூன்றாவது தலைவர்

சென்னை, டிசெ.06

தமிழகத்தில் பதவியிருக்கும் போது காலமான மூன்றாவது முதலமைச்சர் ஜெயலலிதா.

இதற்கு முன்னர் திராவிட முன்னேற்றக்கழகத்தலைவராக இருந்த அண்ணாத்துரை, அ.தி.மு.க.தலைவராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் ஆகியோரும் முதலமைச்சர் பதவியில் இருக்கையிலேயே காலமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மூன்று முதல்வர்களும் தமிழகமக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## செத்துப் பிழைத்து மீண்டும் காலமான ஜெயலலிதா

சென்னை, டிசெ.06

அப்பலோ மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா சிகிச்சைபெற்று வருகையில் நேற்று மாலை திடீரென பலதொலைக்காட்சி ஊடகங்கள் முந்திக் கொண்டு ஜெயலலிதா காலமானார் என்று செய்தியைப் பரபரப்பாக வெளியிட்டன.

காட்டுத் தீ போலப் பரவிய இச் செய்தியை அடுத்து, அப்பலோ மருத்துவமனை வாசலில் முதல்வரின் உடல் நிலை பற்றி அறியக் கூடியிருந்த மக்கள் பக்கம் 20 »

## பாதுகாப்புப் பணியில் ஒரு லட்சம் பொலிஸார்

சென்னை, டிசெ.06

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உடல் நிலைமை கவலைக்கிடமான நிலையை எட்டியமையை அடுத்து தமிழகம் எங்கும் சுமார் ஒரு லட்சம் பொலிஸார் சீருடையுடன் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நேரக்கூடிய நெருக்கடி எதையும் சமாளிக்கக்கூடியதாக தமிழகத்தின் தலைநகர் சென்னை பக்கம் 20 »

### தவராசாவா? இல்லை தவநாதனா?

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது இன்று முடிவாகும்



யாழ்ப்பாணம் .டிசெ.06

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக சி.தவராசா தொடர்ந்தும் நீடிப்பாரா என்பது தொடர்பான தமது முடிவை வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. பக்கம் 19 »



Aaruthal

வாழ்த்துகின்றோம்

இன்று 06.12.2016ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல தமிழ்மொழி மூல மாணவர்களும் சிறப்பான பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற எமது வாழ்த்துக்கள்.

ஆறுதல்,
யாழ்ப்பாணம்.

திரு.சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்று அதிகாரி
மற்றும் ஆறுதல் ஊழியர்கள்.

# ஜெயலலிதா கடந்து வந்த பாதை...

தமிழகத்தின் 6 ஆவது முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா, இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத தலைமையாக கருதப்படுகிறார் என்றால் அது மிகையல்ல. அந்த வகையில், அரசியலில் முத்திரை பதித்த பெண் தலைவர்களில் ஒருவராகத் திகழும் ஜெயலலிதாவின் கடந்த கால வரலாறு...




கர்நாடக மாநிலம் மைசூரில் ஜெயராம் – சந்தியா தம்பதியருக்கு 1948 ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி பிறந்தார் ஜெயலலிதா. அவரது மூதாதையர் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவர்கள்.

**'வெண்ணிற ஆடை' மூலம் சினிமாவுக்குள்**

1965 ஆம் ஆண்டு 'வெண்ணிற ஆடை' என்ற திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான ஜெயலலிதா எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்றவர்களுடன் கதாநாயகியாக நடித்து முன்னணி திரை நட்சத்திரமாக பல ஆண்டுகள் ஜொலித்தார்.

1982 ஆம் ஆண்டு எம்.ஜி. ஆரால் அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெயலலிதா, 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அ.தி.மு. கவின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

1983 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற திருச்செந்தூர் இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து அவர் மேற்கொண்ட பிரசாரம் அந்தக் கட்சியின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது.



சத்துணவுத் திட்டத்துக்கான உயர்மட்டக் குழுவின் உறுப்பினர் உள்ளிட்ட பதவிகளை வகித்த ஜெயலலிதா 1984 ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**தேர்தல் பிரசாரம்**

1984ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். உடல் நலம் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தபோது மக்களவைத் தேர்தலுடன் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலும் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் ஜெயலலிதா தமிழகமெங்கும் மேற்கொண்ட சூறாவளி சுற்றுப்பயணமும் எம். ஜி.ஆரை மீண்டும் முதல்வராக்குவோம் என்கிற கூளுரையும் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து எம்.ஜி.ஆர் மீண்டும் முதலமைச்சர் ஆனார்.

எம்.ஜி.ஆர் மரணத்திற்கு பின்னர்



அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்தது.

**முதல் முறையாக எம்.எல்.ஏயானார்**

இந்தச் சூழ்நிலையில் 1989 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அணி தனித்துப் போட்டியிட்டு 27 இடங்களைக் கைப்பற்றி பிரதான எதிர்க்கட்சி என்கிற அங்கீகாரத்தைப் பெற்றது.

அந்தத் தேர்தலில் அவர் போடி நாயக்கனூர் தொகுதியிலிருந்து முதல் முறையாக எம். எல். ஏயாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரியில், அ.தி.மு.கவின் இரண்டு அணிகளும் ஒன்றிணைந்தன. ஒன்றுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1989 ஆம் ஆண்டு அ.தி. முகவிற்கு மீண்டும் இரட்டை இலை சின்னத்தை



அவர் மீட்டுக் கொடுத்தார்.

1989 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டிலும், புதுவையிலும் அ.தி.மு. க. காங்கிரஸ் கூட்டணி 39 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஜெயலலிதா அரசியல் வாழ்வில் முக்கிய மைல் கல்லாக அமைந்தது.

அதன் பின்னர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மருங்காபுரி, மதுரை கிழக்கு, பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களிலும் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றது.

**1991 இல் முதல்வரானார்**

1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி மரணமடைந்த சூழ்நிலையில் அ.தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் அமோக வெற்றி பெற்று மொத்தம் உள்ள



234 தொகுதிகளில் 225 தொகுதிகளைக் கைப்பற்றியது.

ஜெயலலிதா தலைமையிலான அ.தி. மு.க. முதல் முறையாக இந்தத் தேர்தலில் தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்தது.

தான் போட்டியிட்ட பர்கூர் மற்றும் காங்கேயம் ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்று 1991 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி தமிழகத்தின் முதலமைச்சராக முதல் முறையாகப் பொறுப்பேற்றார்.

**பல் மொழித் திறன்**

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், இந்தி உட்பட பல்வேறு மொழிகளில் பேசும் திறன் கொண்டவர் ஜெயலலிதா.

ஊழல் குற்றச் சாட்டுகள் எழுந்த நிலையில் 1996 ஆம் ஆண்டு சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் சேர்த்து நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்தது.

ஒரு எம்.பி.தொகுதியில் கூட வெற்றி பெறாத அ.தி.மு.க. 4 சட்டமன்ற தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது.

தான் போட்டியிட்ட பர்கூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் சுகவனத்திடம் தோல்வி அடைந்தார். ஜெயலலிதா வாழ்க்கையில் மிகப்பெரிய தோல்வியைத் தேடித் தந்த தேர்தலாக இந்தத் தேர்தல் அமைந்தது.

தோல்வியால் துவண்டுவிடாத ஜெயலலிதா சவால்களைச் சமாளித்து இரண்டே ஆண்டுகளில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணியை 30 இடங்களில் வெற்றிபெறச் செய்தார். அ.தி.மு.க. 18 இடங்களில் வெற்றி பெற்றது.

**மீண்டும் வெற்றி**

ஒரே ஆண்டில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி அமைத்த அ.தி.மு.க. 10 இடங்க ளில் மட்டுமே வெற்றி பெற்றது.

2001 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. தமிழகத்தில் 132 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சியைப் பிடித்தது.


2001ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி இரண்டாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றார்.

**பதவி இழப்பு**

டான்சி ஊழல் வழக்கில் தண்டனை பெற்றதால் உச்ச நீதி மன்ற உத்தரவின்படி முதலமைச்சர் பதவியிலிருந்து 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ராஜினாமா செய்தார்.

டான்சி ஊழல் வழக்கிலிருந்து விடுதலையாகி மீண்டும் 2002 ஆம் ஆண்டும் மார்ச் 02 ஆம் திகதி தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பதவியேற்றார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி



அமைத்து தேர்தலைச் சந்தித்தார் ஜெயலலிதா. இந்தத் தேர்தலில் அந்தக் கூட்டணி தமிழகம் மற்றும் புதுவையில் ஒரு இடங்களில்கூட வெற்றி பெறவில்லை.

2006 ஆம் ஆண்டு தேர்தலில் ம.தி.மு.க. விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டார். இந்தத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிக்கு 69 இடங்களே கிடைத்தன. தி.மு.க. கூட்டணி 163 இடங் களில் வெற்றி பெற்றது.

2009 ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலிலும் அ.தி.மு. கவிற்கு தோல்வியே காத்திருந்தது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் 12 இடங்களையும் தி.மு.க. கூட்டணி 27 இடங்களையும் கைப்பற்றின.



**தோல்விகளினால் துவளாதவர்**

மூன்று தொடர் தோல்விகளால் துவண்டுவிடாமல் அ.தி. மு.க. விற்கு புத்துணர்வூட்டி தோல்விப் பாதையிலிருந்து மீட்டெடுத்து 2011 ஆம் ஆண்டு அந்தக் கட்சிக்கு மிகப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தார். அந்த ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில் விஜயகாந்தின் தே.மு.தி. கவுடன் கூட்டணி அமைத்து அ.தி.மு.க. தேர்தல் களம் கண்டது. அந்தக் கூட்டணிக்கு 203 இடங்கள் கிடைத்தன. அ.தி.மு.க. மட்டும் 150 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

2011 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி தமிழகத்தின் முதலமைச்சராக 4 ஆவது முறையாக ஜெயலலிதா பொறுப்பேற்றுக்கொண்டார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் 2014 ஆம் ஆண்டு கர்நாடக சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனையால் ஜெயலலிதாவின் முதலமைச்சர் பதவியும் எம்.எல்.ஏ பதவியும் ரத்தாகின.

இதையடுத்து கர்நாடக உயர் நீதி மன்றத்தில் செய்த மேல் முறையீட்டில் ஜெயலலிதா நிரபராதி என்று 2015 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி நீதிபதி குமாரசாமி தீர்ப்பு வழங்கினார்.

இதனால் முதலமைச்சர் பதவி வகிக்க ஜெயலலிதாவுக்கு இருந்த தடை நீங்கிய நிலையில் இன்று தமிழகத்தின் முதலமைச்சராக 5 ஆவது முறையாகப் பொறுப் பேற்றார்.

யாரிடம் பேசுவது?
யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை...
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
•மதசார்பற்றது •ரகசியமானது •இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

# அமிர்தநாதனின் மறைவுக்கு சம்பந்தன் இரங்கல் தெரிவிப்பு

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுள் ஒருவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் தந்தையார் பெரியார் அமிர்தநாதனின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று மனவேதனை அடைகின்றேன்.

மன்னார், விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பெரியார் அமிர்தநாதன், விடத்தல்தீவு மகா வித்தியாலயத்தில் தனது கல்வியைப் பெற்ற பின்னர் ஆயுள்வேத வைத்தியராகத் தனது தொழிலை மேற்கொண்டு சமூகப் பணி ஆற்றிவந்தார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் தனது 83 ஆவது வயதில் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

செல்வம் அடைக்கலநாதன் தனது இள வயது முதலே விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்ட காலங்களில் பல நெருக்கடிகளைச் சந்தித்த போதெல்லாம் அவருக்குப் பக்கபலமாக நின்று செயற்பட்டவர் மறைந்த பெரியார் அமிர்தநாதன் அவர்கள்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது மனைவி மற்றும் மூத்த மகன் செல்வம் அடைக்கலநாதன் உட்பட பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.-என்றுள்ளது.

### கணேஸ்வரனும் இரங்கல்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதமும் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அந்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர்களின் ஜனநாயக பயணத்துக்குப் பலம் சேர்க்கும் அரசியல் இயக்கத்தின் தலைவரை தமிழ் மண்ணுக்குத் தந்த பெருமை ஐயா அமரர் அடைக்கலம் அமிர்தநாதனைச் சார்ந்து நிற்கிறது. போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ளும் போராளிகளின் இடர்களை அவர்களைப் பெற்றவர்களும் உறவுகளுக்கும் தாங்கியிருக்கிறார்கள். எனவே அந்தப் போராளிகளை பெற்றெடுத்தவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

அந்த வகையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரை தமிழ் மண்ணுக்குத் தந்த அமரர் அடைக்கலம் அமிர்தநாதனின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

அன்னாரை இழந்து பிரிவால் துயரில் வாடும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுத்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.- என்றுள்ளது.

(ஐ)

# வவுனியா சுதந்திரக் கட்சிக்குள் பிளவா? ஏட்டிக்குப் போட்டியாகக் கூட்டங்கள்!



மஸ்தான் நடத்திய கூட்டம்



வாசல நடத்திய கூட்டம்

வவுனியா மாவட்ட சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மாவட்ட மட்ட மத்திய செயற்குழுக் கூட்டம் இருவேறு இடங்களில் ஏட்டிக்குப் போட்டியாக நடைபெற்றன.

வவுனியா மாவட்ட சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இரண்டு இடங்களில் ஒரே நேரத்தில் இரு அமைப்பாளர்களின் தலைமையில் கூட்டங்கள் இடம்பெற்றன.

சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கே.மஸ்தான் தலைமையில் ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றிலும்,

அதேநேரம், சுதந்திரக் கட்சியின் மற்றுமோர் அமைப்பாளரான வாசல என்பவரின் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்திலும் கூட்டங்கள் நடைபெற்றன.

கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் இரு கூட்டங்களுக்கும் பிரிந்து சென்றிருந்தனர். இரு தரப்பினரும் இது குறித்து கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. (100)

(முன்னர் வந்த செய்தி 08 ஆம் பக்கத்தில் )

# தனியார் பஸ்ஸின் கீழ் சிக்கி நடத்துநர் பரிதாப மரணம்!

கொழும்பு, டிசெ.06

பாணந்துறை நகரத்தில் தனியார் பஸ்ஸின் அடிப்பகுதியில் சிக்கி, அந்த பஸ்ஸின் நடத்துநர் பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சர்ச்சையான நிலை ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆபத்தைத் தவிர்க்கப் பஸ் சாரதி நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பத்தில் சிலரால், சாரதி மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த நடத்துநர் மீதும் குறித்த குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

பின்னர், நடத்துநரை பஸ்ஸின் அடியில் போட்டுள்ளனர். அதனை அறியாத சாரதி, பஸ்ஸை செலுத்திய போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று முதற் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த விபத்தில் 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

(ஐ)

### மத்திய மாகாண ஆளுநர் ஹட்டனுக்கு

ஹட்டன்நகரிலுள்ள குறைப்பாடுகளை கண்டறியும் வகையில் மத்திய மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க திடீர் விஜயமொன்றை நேற்று மேற்கொண்டுள்ளார்.

சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பமாவதை முன்னிட்டு யாத்திகர்களின் நலன் கருதிப் போக்குவரத்து வசதிகளை மேற்கொள்ளும் வகையிலேயே ஆளுநர் இந்த விஜயத்தை முன்னெடுத்துள்ளார்.

ஹட்டன் ரயில்வே நிலையம், இலங்கை போக்குவரத்து சபையின் ஹட்டன் டிப்போ உட்பட பிரதான பஸ் நிலையதையும் பார்வையிட்டுள்ளார்.

# கந்தான திரிபோஷ உற்பத்தி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.06

கந்தான திரிபோஷ உற்பத்தி நிறுவனத்தின் நவீனமயப் படுத்தப்பட்ட கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து, புதிய இயந்திரங்களை இயக்கி வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு 1973 ஆண்டு ஆரம்பித்த கந்தான திரிபோஷா நிறுவன அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக '2016 வரவு- செலவுத் திட்டத்தினூடாக அரசு 500 மில்லியன் ரூபாவும் 2015 வரவு- செலவு த் திட்டத்தில் 200 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்திருந்தது.

அதற்கமைய திரிபோஷ கம்பனியின் தொழிற்சாலையை நவீனமயப்படுத்தி, புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பின்னர் தொழிற்சாலையின் செயற்திறன் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வண.அத்துரலியே ரத்தன தேரர், அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர் பைசால் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன, சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்கிரம, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால, திரி போஷ கம்பனியின் தலைவர் எம்.டி. பந்துசேன ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஐ)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடதக்கது.

(C/096)

# பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு



பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்குழு நடத்திய பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை தியாகிகள் அறக்கொடைநிலையத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்விலே, வரவேற்புரையை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. கேதாரகௌரியும் தலைமையுரையை யாழ். மாவட்ட செயலகத்தின் பெண்கள் அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட இணைப்பாளர் ந.உதயனியும் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பாகவும் யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சோமேஸ்வரி கிருஷ்ணகுமார், 'பால்நிலை சமத்துவம்' தொடர்பாகவும் உரையாற்றினர். இறுதியாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் பெண்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர் மு.வைதேகி 'பெண்களுக்கு எதிரான வன்முறை' என்ற தலைப்பில் பேசினார். அதை அடுத்து வீட்டு வன்முறை தொடர்பான ஆய்வு நூல் வெளியிடப்பட்டது. நன்றியுரையை தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் எஸ்.சித்திரா வழங்கியிருந்தார்.

(இ-10)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதியின் நம்பிக்கை சாத்தியமா?

**எதிர்பார்த்தபடி இனவாத வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறத் தொடங்கிவிட்டது.**

இந்த நாட்டில் கடந்த ஆறு தசாப்த காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் ஏற்பாடுகளைக் கொண்டதாகப் புதிய அரசமைப்பை உருவாக்கும் எத்தனங்கள் தீர்க்கமான கட்டத்தை அடைந்துவிட்டன. அத்தகைய அரசமைப்பால் நாடு துண்டாடப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றமையானது இனவாத வேதாளம் மீண்டும் நாடு என்ற முருங்கை மரத்தில் பலமான பிடிமானத்துடன் ஏறத்தொடங்கிவிட்டது என்பதற்கு ஆரம்ப அறிகுறி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தற்போதைய முயற்சிகள் குழப்பப்படுமானால், இந்த நாட்டில் இரத்தக் களறி ஏற்படவும் வாய்ப்புண்டாகும்.

இந்த எச்சரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி, அங்கு உரையாற்றி, நாட்டு மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தார்.

தீர்வுக்கான தற்போதைய முயற்சிகளை இனவாதத்தைக் கிளப்பி முறியடிக்கும் எத்தனம் குறித்து ஜனாதிபதி கவலையும் வெளியிட்டிருந்தார்.

இந்த விடயத்தில் தென்னிலங்கை அரசு எப்படி நடந்து கொண்டது என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதை நாடாளுமன்றத்தில் விவரித்தும் சுட்டிக்காட்டியும் இருந்தார்.

பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சந்திரிகா பண்டாரநாயக்க போன்ற தலைவர்கள் கடந்த காலத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றுக்கான முன்முயற்சிகளை மேற்கொண்ட போதெல்லாம், அக்காலப்பகுதிகளிலும் சிலர் அவற்றைக் குழப்பினர். அதேபோன்று எமது தற்போதைய முயற்சிகளையும் சிலர் குறைத்து மதிப்பீடு செய்து குழப்ப முயலுகின்றனர். புதிய அரசமைப்பின் மூலம் நாட்டைத் துண்டாடப்போகின்றோம். பௌத்த மதத்துக்குரிய முதன்மை அந்தஸ்தை நீக்கப்போகின்றோம் என்றெல்லாம் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர் என்று கடந்த வியாழனன்று ஜனாதிபதி மைத்திரிபால நாடாளுமன்ற உரையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

அந்த வேலையைத்தான் முன்னாள் ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷ கனகச்சிதமாகச் செய்கின்றார் என்பது அவரது பிந்திய அறிக்கைமூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ இப்படித்தான் நடப்பார் என்பதை உய்த்துணர்ந்துகொண்டு, ஏன் அப்படி நடப்பார் என்பதற்கான காரணங்களையும் ஜனாதிபதி சிறிசேன, கடந்த வியாழனன்றே நாடாளுமன்றத்தில் தெரிவித்து விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தப்பிக் கொள்வதற்கும் கடந்த காலத்தில் இந்த (இனப்) பிரச்சினையைப் பயன்படுத்திய சில தலைவர்கள், இன்று எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வரும் எதிர்பார்ப்புடன் - குறுகிய அரசியல் நோக்குடன் - இந்த முயற்சியைக் குழப்புகின்றனர்." - என ஜனாதிபதி திட்டவட்டமாகவும், வெளிப்படையாகவும் கூறியமை புறந்தள்ளக் கூயது அன்று.

அதனையே மஹிந்த ராஜபக்ஷ இப்போது செய்கின்றார். பறிகொடுத்த அதிகாரத்தை - ஆட்சியை - மீளக் கைப்பற்றுவதற்காக எந்த எல்லை வரையும் போகக்கூடியவர் அவர்.

அதற்காகத்தான் இனவாதப் பூதத்தைத் தமது கையில் எடுத்திருக்கின்றார்.

இத்தகையோருக்கு நேரக்கூடிய கதி எத்தகையது என்பதையும் ஜனாதிபதி சிறிசேன தமது அன்றைய நாடாளுமன்ற உரையில் வெளிப்படையாக சுட்டிக்காட்டியிருந்தார்.

"ஏற்கனவே அதிகாரத்தை இழந்து, எதிர்காலத்தில் அந்த அதிகாரத்துக்கு மீளவருவதற்கான எதிர்பார்ப்புகளுடன் செயற்படுபவர்கள் எமது உண்மையான இந்த முயற்சியைக் குழப்புவார்களாயின் எதிர்காலத்திலும் அவர்களால் அரசியலுக்கே வரமுடியாமல் போகும்." - என்று ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் வைத்து எச்சரித்தும் இருந்தார் ஜனாதிபதி சிறிசேன.

இனவாதப் பூதத்தைக் கிளப்பி, அதில் அரசியல் செய்தவர்களை அந்த இனவாதப் பூதமே கபளீகரம் செய்தமைக்கு இலங்கை அரசியல் வரலாற்றில் உதாரணங்கள் இல்லை.

நீறுபூத்த நெருப்பாகத் தென்னிலங்கை சிங்களத்துக்குள் தூங்கிக்கிடக்கும் பேரினவாதப் பூதத்தை உசுப்பி, எழுப்பி விடுபவர்கள் அந்தப் பூதத்தின் மூலம் அரசியல் லாபம் ஈட்டினர் என்பதே கடந்தகால வரலாறு. தென்னிலங்கை அரசியலின் பட்டறிவு அதைத்தான் கூறி நிற்கின்றது.

அதற்கு எதிர்மாறான - எதிர்மறையான - விளைவு இம்முறை நடக்கும் என்று அதிகாரத்திலிருக்கும் ஜனாபதி கூறுகின்றார். ஆட்சியிலிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கணிப்பும், எதிர்பார்ப்பும், நம்பிக்கையும்கூட அதுதான்.

அப்படி, இனவாதத் தீயை ஊதிப் பெருப்பித்து, விளாசி எரிய வைத்து, அதில் அரசியல் குளிர்காய முயல்வோர் அதற்கே இரையாகும் நிலைமை இந்நாட்டில் வருமானால், அது இந்நாட்டின் அரசியல் எழுச்சியின் உன்னதத்தைக் காட்டுவதாக அமையும்.

அது நடக்குமா? நம்பிக்கை வைத்து நப்பாசை கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.06

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு தேர் தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் உள்முரண்பாடுகளைத் துரித கதியல் தீர்த்துக் கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய உத்தியோகபூர்வ கடிதம் ஊடாக அந்தக்கட்சிக்கு அறிவித்துள்ளார்.

கட்சியின் செயலாளர் பதவி தொடர்பில் நீடித்து வரும் முரண்பாடுகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தீர்வு காணப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தத் திகதிக்குள் உள் முரண்பாடுகள் களையப் படாவிட்டால், உட்கட்சிப் பூசல் காணப்படும் கட்சிகளின் வரிசையில் முஸ்லிம் காங்கிரஸை தேர்தல் ஆணைக்குழு பட்டியலிட நேரிடும் என்று மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமாக ரீ.எம். ஹசன் அலி கடமையாற்றி வருவதுடன், செயலாளராக ஏ.சீ.ஏ.எம் மன்சூர் கடமையாற்றி வருகின்றார்.

தேர்தல் ஆணைக்குழு ஒரு செயலாளருடன் தொடர்பு கொள்வதையே விரும்புவதாகவும் அதுவே நடைமுறை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, கட்சியின் செயலாளர் யார், யாருடன் தொடர்பு கொள்ள வேண் டும் என்பதை கட்சி தீர் மானித்து உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (எ)

# இலங்கையின் பொருளாதாரம் 2017 இல் முன்னேற்றமடையும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, டிசெ.06

இலங்கையில் தற்போது காணப்படும் பொருளாதாரப் பின்னடைவு அடுத்த ஆண்டில் நீங்கி, 6.3 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் காணும் என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி எதிர்வு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''அதன்பின் 2018ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வருடாந்தம் 7 சத வீதத்தால் சீராக அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இவ்வருடம் நாட்டின் திரட்டப்பட்ட பொருளாதார வளர்ச்சி 5 தொடக்கம் 5.5 சதவீதமாக இருந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் முதலீடுகள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் 2020 இல் இலங்கையின் தனிநபர் வருமானம் மூவாயிரத்து 500 அமெரிக்க டொலர்களாக. அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.''என்றார். (எ)

# 'இருளுள் இதயபூமி' ஆவணப்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.06

யாழ்.ஊடக அமையத்தால் தயாரிக்கப்பட்ட மணலாறு எல்லைக்கிராமங்கள் பற்றி உண்மையை வெளிக் கொணரும் ''இருளுள் இதயபூமி'' எனும் ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஆவணப்படம் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகத் தலைவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

# 'ஸ்ரீலங்கன்' விமான சேவையை தனியார் மயமாக்க விடமாட்டோம்!

## கைத்தொழில் பிரதி அமைச்சர் அருத்திக்க பண்டார தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.06

'ஸ்ரீலங்கன்' விமான சேவையை தனியார் மயப்படுத்த விடமாட்டோம் என்று தெரிவித்தார் பிரதி அமைச்சர் அருத் திக்க பெர்னாண்டோ.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வரவு - செலவுத்திட்டத் தில் அரச தொழில் முயற்சி, ஆரம்ப கைத் தொழில், வர்த்தக கைத் தொழில் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'ஸ்ரீலங்கன்' விமான சேவையை தனியார் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் தனியாருக்கு 80 வீதமும் அரசுக்கு 20 வீதமாக பகிரும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திட அரசு திட்டமிட்டுள்ளது. இது பெரியளவிலான அநீதி. இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

இலாபமீட்ட முடியுமான நிறுவனங்களை விற்கவேண்டாம். மிஹின் லங்கா நிறுவனம் இறுதித் தறுவாயில் நல்ல நிலைக்கு வந்தபோதும் அதன் சேவையை தற்போது நிறுத்தியுள்ளனர்.

அத்துடன், 3 விமானங்கள் பெறும் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்ட போது இதன் மூலம் அதிக தொகை நஷ்டம் செலுத்த நேரிட்டுள்ளது.

எனவே, 'ஸ்ரீலங்கன்' விமான சேவையை தனி யார் மயப்படுத்த விடமாட் டோம். அரசில் இருந்து கொண்டு தனியார் மயப்படுத்தலுக்கு எதிர்ப்பு வெளியிடுவோம். முன்னைய ஆட்சியின் போது விமான சேவையில் பாரிய மோசடிகள் இடம்பெற் றுள்ளன. எனினும், அதற்காக எமது உடைமைகளை விற்கமுடியாது.

விமான சேவையின் நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானத்தை வெளி தரப்பினர் எடுக்க இடமளிக்க முடியாது.

விமான சேவை நடவடிக்கைகள் தொடர்பான சில தீர்மானங்கள் அமைச்சர்களுக்குத் தெரியாது. எனவே அமைச்சர் கபீர் ஹாஷிம், எரான் விக்கிரமரத்ன ஆகியோரை நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தும் வகையில் தீர்மானங்கள் எடுக்க வேண்டாம் - என்றார். (எ)

### நாளை

07.12.2016
புதன்கிழமை
திதி : அட்டமி முன்னிரவு 9.25 வரை
நட்சத்திரம்: சதயம்
முற்பகல் 8 மணி வரை
சுபநேரம்4.47 -6.17
இராகுகாலம் 12.17-1.47

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
இளைஞர்களை தயார்ப்படுத்துவோம். வலுட்டுவோம். அணிதிரட்டுவோம். பெண்களின் இன்னங்களை இல்லாதொழிப்போம்.
JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
16
2016

காலைக்கதிர்
Kalaikkathir



# பாரபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப மாவட்ட ரீதியில் இளையோர் நடவடிக்கை

## மனித உரிமைகள் தினத்தை மாவட்ட ரீதியில் இன்று முதல் அனுஷ்டிக்க அழைப்பு

வவுனியா, டிசெ.06

பாரபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்னும் தொனிப் பொருளில் 20 மாவட்டங்களிலும் மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிப்போம் என்று அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்புக் கோரியுள்ளது.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் செயலாளர் சி.பிரதீப் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த வியடம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டித்து வருகின்றோம். 2013 ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடியான நிலைக்கு மத்தியிலும் வடக்கின் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் பிரச்சினைகளை முன்வைக்கும் விதத்தில் எமது மனித உரிமைகள்தினத்தை நடத்தினோம்.

அதில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 250 இளைஞர், யுவதிகள் பங்கு கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து 2014 இல் மிகவும் அச்சுறுத்தலான காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 700 இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆவணப்படுத்தி வட மாகாண முதலமைச்சரிடம் மகஜராகக் கையளித்திருந்தோம்.

2015ஆம்ஆண்டுஇலங்கையில் முதன் முறையாக சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து ஓர் அரசியல் தீர்வை வலியுறுத்தும் நிகழ்வாக 2 ஆயிரத்து 500 இளைஞர், யுவதிகள் ஒன்றிணைந்து யாழ். முற்றவெளியில் ஒரு நிகழ்வை நடத்தியிருந்தோம். அதன் போது அரசி யல் தீர்வை முன்னிறுத்தும் மக்களின் அரசியல் அபிலாசைகள் சில வற்றை முன்வைத்திருந்தோம்.

மக்களுக்கு ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. எமது அமைப்பு ஒவ்வொரு மனித உரிமை தினத்திலும் ஒரு பேசுபொருளை கையாள்கின்றது. அந்தப் பேசுபொருளை மக்கள் தங்களுடைய பேசுபொருளாக மாற்றிக் கொள்கிறார்கள். அந்தவகையில் 2016 ஆம் ஆண்டு மனித உரிமைதினத்தை பாரபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தொனிப் பொருளில் நிகழ்த்தவுள்ளோம்.

இலங்கையில் பல அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. பல அரசியல் திருப்பு முனைகள் இடம்பெற்றிருக்கின்றன. எல்லாத் திருப்பு முனைகளிலும் பாரபட்சம் காட்டுதல் என்ற ஒன்று இடம்பெற்றிருக்கிறது. பாரபட்சம் காட்டியதன் அடிப்படையில் தான் எமது இனப் பிரச்சினையும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போதைய ஆட்சி மாற்றத்தை மக்கள் அதிகம் நம்பு கிறார்கள். மக்கள் நம்பும் நிலை யில் கூட அவர்களுக்கு தெரியாமலே பாராபட்சம் பார்க்கப்பட்டு பல்வேறு விடயங்களில் விலக்கப்பட்டுள்ளார்கள். இதனை மக்களுக்குபுலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இன்று 6ஆம்திகதி தொடங்கி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை 20 மாவட்டங்களிலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை இணைத்து மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடவுள்ளோம்.

இதன் மூலம் ஒரு மகஜரை தயாரித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும், இந்த நல்லாட்சி அரசுக்கும் வழங்கவுள்ளோம்.இலங்கையின் புதிய அரசமைப்பு இன, மத, மொழி ரீதியாக பாரபட்சமற்றதாக இருக்க வேண்டும்என்பதும்எமது கோரிக்கையாகும்.- என்றார்.(ஐ-100)

## மனித உரிமைகள் விழிப்புணர்வு நிகழ்வு முல்லைத்தீவில் இன்று ஆரம்பம்

*மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்று முல்லைத்தீவில் பாரபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பும் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெறவுள்ளது.*

*சர்வதேசமனித உரிமைகள்தினம் டிசெம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் அதனை முன்னிட்டு 'பாரபட்சமற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு இன்று தொடக்கம் 20 ஆம் திகதி வரை நாடு முழுவதும் நடத்தப்படவுள்ளது.*

*அன்புக்கும்நட்புக்குமானவலையமைப்பின் ஏற்பாட்டில் முதல் நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் இன்றுகாலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது.*

*அதனைத் தொடர்ந்து நாளை 7 ஆம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்திலும், 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. மண்டபத்திலும், 9 ஆம் திகதி கிளிநொச்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும், 10 ஆம் திகதி வவுனியா சுத்தானந்தா மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (ஐ-100)*

## புதிய 12 தபால் முத்திரைகள் வெளியீடு



தபால் திணைக்களத்தின் தபால் தலை சேகரிப்பு பணியகம் நேற்று 12 புதிய முத்திரைகளை (தபால்தலை) வெளியிட்டுள்ளது. இந்த முத்திரைகள் வரலாறு காணாத புதிய இயற்கை அழகுகளை சித்திரிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இலங்கையின் இயற்கையை பிரதிபலிக்கும் முகமாகவே இந்த முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. புதிய முத்திரைகள் பால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சர் எட்.எச். ஹலீமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இதேவேளை, முத்திரைகள் அமைச்சருக்கு பொது தபாலதிபர் ரோஹனஅபேவிக்ரமவால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## கிளி. முசலம் காட்டுக்குள் கசிப்புக் குகை முற்றுகை

கிளிநொச்சி, டிசெ.06

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முசலம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவன் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து குறித்த இடம் முற்றுகையிடப்பட்டது என்றுகூறப்படுகின்றது.

குறித்த முற்றுகையின் போது ஆறு லட்சத்து 30 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும், 75ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.


இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தர்மபுர பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத மதுக்கலவை மற்றும் குற்றத்தடயப் பொருள்களை எதிர்வரும் 8ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிளில் இருந்து கிடைக்கப் பெற்ற ஆவணங்களின் மூலம் குற்றம் புரிந்த நபர்களைத் தேடிப்பிடிப்பதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)



*தீவகப் பகுதிகளில் ஊரி அகழப்பட்டு வருவதால் அங்கு ஊர்மனைகளுக்குள் கடல் நீர் புகும் அபாயம் நிலவுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மண்கும்பான் மக்களின் எதிர்ப்பையும் மீறி மண்கும்பான் நீர் வழங்கல் சபைக்கு மிக அருகில் சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறாமல் வகைதொகையின்றி மண் அகழப்பட்டு வருகிறது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. உரிய அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)*



*கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 52 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மணி மண்டபத்தில் நடைபெற்றது.*

*இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு பெரியார் வீரசிங்கத்தின் உருவச்சிலையைத் திறந்து வைத்தார்.*

*சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமாரும் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகனும் கலந்துகொண்டனர்.*

*கூட்டுறவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கூட்டுறவில் நீண்ட காலம் பணியாற்றிய கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (இ-12)*



திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை மரக்கறி வியாபாரிகள், நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். திருகோணமலை பொதுச்சந்தை வியாபாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி பொதுச் சந்தைக்கு முன்பாக ஆரம்பமாகி கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தைச் சென்றடைந்தது. இதன்போது, ஆளுநருக்கான மகஜரையும் வியாபாரிகள் கையளித்தனர். பொதுச் சந்தையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கடைகளுக்கு வருடாந்தம் அதிகரிக்கப்படும் வாடகையைக் குறைக்க வேண்டும், சந்தைக்கு வெளியில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளை நிறுத்த வேண்டும், மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும், வரியைக் குறைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. (ச)

# இனக்குரோதம் தடுக்கப்பட்டாலே நல்லாட்சி அரசு நிலைபெறும்

## எச்சரிக்கிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் லாஹிர்



பேரினவாதிகளின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. நல்லாட்சி அரசு இவ்வாறான அராஜக ஆட்சிக்கு வழி சமைக்கக் கூடாது. நாடு தொடர்ந்தும் நல்லாட்சியில் நிலைக்க வேண்டுமாக இருந்தால் இனக்குரோத செயற்பாடுகள் தடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஜே.எம். லாஹிர் தெரிவித்தார்.

திருகோணமலை சோனகத்தெருவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்புமாவட்டத்தில் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி கலவரத்தை ஏற்படுத்த முயன்றவர்களின் முயற்சி ஓரளவு முறியடிக்கப்பட்டது. பொதுபல சேனா மற்றும் ராவண மட்டக்களப்பு விகாராதிபதி ஆகியோரின் அடுத்த திட்டம் திருகோணமலையில் அமைதியின்மையை ஏற்படுத்துவதே ஆகும்.

நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். திருகோணமலை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டும். இவ்வாறான நிலைமையிலும் நல்லாட்சி அரசு எந்த விதமான அறி விப்புகளையோ, அறிக்கைகளையோ வெளியிடவில்லை. நாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் முஸ்லிம் மக்களுக் கெதிரான அராஜகச் செயற்பாடுகள்நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

அனைத்துக் கட்சிகளின் முஸ்லிம் தலைமைகளும் முஸ்லிம் மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும்.-என்றார். (ச)

# அட்டாளைச்சேனைப் பகுதியில் 600 மாற்றுத் திறனாளிகள்!



அம்பாறை, டிசெ.06

அம்பாறை,அட்டாளைச் சேனைப் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 600 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர் என்று பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் தெரிவித்தார்.

சர்வதேச வலது குறைந்தோர் தினத்தையொட்டி மாற்றுத் திறனாளிகளுக்கான பரிசளிப்பு மற்றும் கருத்தரங்கு நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவர்களில் சுமார் 115 பேருக்கு மாதாந்தம் 3ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமூக சேவைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகிறது. 25 மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்குச் சம்புநகர் பிரதேசத்தில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

மாற்றுத் திறனாளிகளை சமூகத்திலுள்ளவர்கள் கௌரவப்படுத்த வேண்டும். அவர்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளன. இவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்படுகின்றார்கள். இவர்களிடத்தில் ஏதோ ஒரு திறமை மறைந்திருக்கின்றது. அதனைக்கண்டறிந்து வெளிப்படுத்துவது நமது கடமையாகும்.- என்றார். (ச)

# கிழக்கு அமைச்சரின் வாகனம் விபத்துக்குள்ளாகி பெண் காயம்



திருகோணமலை.டிசெ.06

திருகோணமலை - கந்தளாய் வீதியில் கிழக்கு மாகாணக் காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதியின் வாகனம், மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் காயமடைந்தார்.

ஆர்.எம்.பொடி மெனிக்கா (வயது43) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ச)

# எமது ஒற்றுமையைச் சிதைக்க காத்திருக்கின்றான் மாற்றான்!

## எச்சரிக்கிறார் கிழக்கு கல்வி அமைச்சர்

தமிழர்கள் தனித்துவம் வாய்ந்த ஓர்இனம். எமக்கென்று கலை, கலாசாரம், மொழி, பண்பாடு என்பன உள்ளன. இதனை எதற்காகவும் இழந்துவிடக் கூடாது.எங்களது ஒற்றுமையைச் சிதைக்க மாற்றான் எவ்வாறான போர்வையில் வந்தாலும் அவர்களை நம்பி ஏமாந்து விடக்கூடாது.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் கிராம அபிவிருத்தியின் ஊடாக புதிய வளத்தாப்பிட்டி, மல்வத்தை கிராமங்களுக்கான வீதிகளை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தகால ஆட்சியாளர்கள், அவர்களுக்கு துணை போயிருந்தவர்கள் என எல்லோரும் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தர விடிவு வந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாகச் செய்றபடுகின்றார்கள்.

இந்த நேரத்தில் தமிழ் மக்களாகிய நாங்கள்எதிரியினுடைய வலைக்குள் அகப்பட்டு சிதறிவிடாமல் ஒற்றுமையாக செயற்படவேண்டும்-என்றார். (ச)

# பாலியல் தொழில் விவகாரம்; சிவகீதா உட்பட நால்வருக்குப் பிணை

பாலியல் தொழில் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ,மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் உட்பட மற்றும் நால்வரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் நேற்று இந்தச் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்நிலையிலே தலா 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணை மற்றும் 2 இலட் சம் ரூபா பெறுமதியான இருவரின் சரீரப் பிணைகளிலும் நீதிவான் அவர்களை விடுவித்தார்.

மேலும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் இவர்கள் கையொப்பம் இட வேண்டும் என்பதுடன், எதிர்வரும் 05ஆம் திகதி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராக வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

திருகோணமலை -மட்டக்களப்புப் பிரதான வீதியிலுள்ள முன்னாள் மேயரின் வீட்டுடன் இணைந்த கட்டட அறைகள் வெளியார் தங்குவதற்காக வாடகைக்கு விடப்பட்டிருந்தன. அந்நிலையில் அங்கு பாலியல் தொழில் இடம்பெறுகின்றது எனக் கிடைத்த தகவலை அடுத்தே முன்னாள் மேயர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

முன்னாள் மேயரின் கணவர் உட்பட ஐவர் பொலிஸ் பிணையில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று ஆரம்பமாகிறது க.பொ.த. சா/தர பரீட்சை

## இம்முறை 7 லட்சம் பரீட்சார்த்திகள்

கொழும்பு, டிசெ.06

க.பொ.த சாதாரண தர பரீட்சை இன்று செவ்வாய் கிழமை ஆரம்பமாகிறது.

இம்முறை சாதாரண தர பரீட்சைக்கு 7 இலட்சம் மாண வர்கள் தோற்றுகின்றனர். மேலும், 5 ஆயிரத்து 669 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது என்று பரீட்சைகள் திணைக் களம் அறிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள சாதாரண தர பரீட்சை எதிர் வரும் 17ஆம் திகதி வரைக்கும் நடைபெறவுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு 65 ஆயிரத்து 524 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படு வார்கள் என்றும் திணைக்களம் அறி வித்துள்ளது.

இது தொடர்பில் பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஜே. புஷ்ப குமார வெளியிட்டுள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

கல்வி பொது தராதர சாதா ரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 8 மணிக்கு முன்பு பரீட்சை நிலையத்திற்கு சமுக மளிக்க வேண்டும். பரீட்சை நிலையத்திற்கு வரும் மாண வர்கள் பரீட்சை அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு கொண்டுவர வேண்டியது கட்டாயமாகும்.

பரீட்சைக்கு வரும் போது பரீட்சை அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் கள் சரியாக உள்ளனவா என்ப தனை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சை நிலை யத்திற்கு கையடக்க தொலை பேசி பாவனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கு பதிலாக வேறு நபர் பரீட்சைக்கு தோற் றுவதைக் கண்டறிந்தால் உடனே பரீட்சை நிலையத்தில் வைத்தே அந்த நபர் பொலி ஸாரினால் கைது செய்யப் படுவார். பரீட்சை தொடர்பில் மேலதிக தகவல்களையோ அல்லது முறையீடுகள் செய்வ தாயின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

பரீட்சைத் திணைக்களத்தின் பிரிவு இலக்கம் 1911, பாட சாலை பரீட்சை செயற்பாட்டு பிரிவு 011 2784208, 011 2784537, ஆகிய தொடர்பு கொள்ளமுடியும்.

பொலிஸ் தலைமையகத் திற்குத் தொடர்பு கொள்வதா யின் 0112421111 அல்லது பொலிஸ் அவசர பிரிவு இலக் கமான 119 க்குத் தொடர்பு கொள்ள முடியும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

# வழமைக்குத் திரும்பின தனியார் பஸ் சேவைகள்




கொழும்பு, டிசெ.06

வேலை நிறுத்தம் காரணமாக தடைப்பட்டிருந்த தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இது தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேள னத்தின் தலைவர் ஸ்டான்லி பெர்னான்டோ தெரிவித்துள் ளதாவது:-

தொடர்ந்து இரு நாள்கள் தனியார் போக்குவரத்து உரி மையாளர் சம்மேளனம் வேலை நிறுத்த போராட்டத்தை முன் னெடுக்க தீர்மானித்திருந்தது. முதல் நாள் எமக்கான தீர்வைப் பெற்றுத்தர அரசாங்கத்தின் பிரதிநிதிகள் எவரும் முற்படாத காரணத்தினாலேயே போராட் டத்தை மேலும் ஒருநாள் நீடிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

அதன் பின்னர் போராட்டம் தொடர்ச்சியாக இரண்டாம் நாள் நீடித்ததையடுத்து ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவரிடம் எமக்கு உள்ள சிக்கல்கள் குறித்து முழுமையாக தெளிவு படுத்தியுள்ளோம்.

அதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் கவனம் எடுப்பதாகவும் இது தொடர் பில் ஆராய்வதற்கான குழு ஒன்றையும் இவ்வாரத்துக் குள் நியமிப்பதாகவும் ஜனா திபதி உறுதியளித்தார். எனவே நாங்கள் தற்போது போராட் டத்தைக் கைவிட்டு எமது தீர்விற்காகக் காத்திருக்கின் றோம்.

எனவே வேலை நிறுத்தம் காரணமாக விடுமுறையில் சென்ற எமது சம்மேளனத்திற்கு சொந்தமான பேருந்து சாரதி கள் சேவையில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது சகல தனியார் பேருந்துக்களும் சேவையில் ஈடுபட்டுள்ளன என்று தெரி வித்துள்ளார்.

# ஜப்பானின் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்!




கொழும்பு, டிசெ.06

ஜப்பான் கடற்படையின் போர்க் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்துள்ள தாக, இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.


கிரிசாமி என்ற ஜப்பானியக் கடற்படைக் கப்பலே, நல் லெண்ண மற்றும் விநியோகத் தேவைகளுக்காக கொழும்புத் துறை முகத்தை வந்தடைந் துள்ளது.

இந்தப் போர்க்கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வர வேற்பு அளித்துள்ளனர்.

நேற்று இந்தப் போர்க்கப்பல், கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றுள் ளது.

இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து, இலங்கைக்கு வந் துள்ள 96 ஆவது வெளிநாட் டுப் போர்க்கப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# கருணாவின் பிணை மனு கோரிக்கை நிராகரிப்பு



கொழும்பு, டிசெ.06

கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் சார்பில் தாக்கப்பட்ட பிணை மனுக் கோரிக்கையைக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அரசுக்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத் தினார் என்ற குற்றச்சாட்டு கருணாமீது சுமத்தப்பட்டது.

குற்றச்சாட்டிற்கு அமைய பொலிஸ் நிதிமோசடிப் பிரிவி னால் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி கைது செய் யப்பட்ட கருணா, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

இந்த நிலையில், விநாயக மூர்த்தி முரளிதரனின் பிணை மனுக்கோரிக்கை நேற்று கொழும்பு நீதி மன்றில் முன் வைக்கப்பட்ட நிலையிலேயே இந்தக் கோரிக்கை நீதிமன்றத் தால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

# திஸ்ஸ அத்தநாயக்க பிணையில் விடுதலை



கொழும்பு, டிசெ.06

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பிணை யில் விடுதலை செய்யப்பட் டுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க நேற் றைய தினம் கொழும்பு உயர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

அப்போது, 25 ஆயிரம் ரூபா பண பிணையிலும், ஐந்து லட்சம் ரூபா இரண்டு சரீரப் பிணையிலும் விடுதலை செய் யப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் பொது வேட் பாளராக களமிறங்கிய மைத்தி ரிபால சிறிசேன மற்றும் அப் போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவித்தோடு, அது தொடர் பிலான போலி ஆவணங்க ளையும் வெளியிட்டதாக திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் ஆவ ணங்கள் குறித்து மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கைதுசெய் யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுதலை செய் யப்பட்டிருந்தார்.

எனினும் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய, இந்த முறைப்பாடு கடந்த ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நிலையில், அவரை நேற்றைய தினம் வரை விளக்க மறியலில் வைக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே நேற்று திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

# மாணவர்கள் கல்விக் காலத்தில் இலட்சியத்துடன் பயணியுங்கள்

## ஆண்டான்குளம் பரிசளிப்பு விழாவில் டெனிஸ்வரன் புத்திமதி





மன்னார், டிசெ.06

ஒவ்வொரு மாணவர்களும் ஒவ்வொரு இலட்சியத்தோடு கல்விக்காலத்தில் பயணிக்கவேண்டும்.

ஆண்டான்குளம் பாடசாலை பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போது அமைச்சர் டெனிஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபையின் மன்னார் மாவட்ட உறுப்பினர்களான வைத்தியர் ஞா.குணசீலன், சட்டத்தரணி பிரிமூஸ் சிறைவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி அமைச்சர் உரையாற்றுகையில் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

எமது மாணவர் சமுதாயம் இன்னும் வளர்ச்சியடையவேண்டும் ஆண்டான்குளம் பாடசாலையை பொறுத்தமட்டில் கடந்த மூன்று வருடங்களுக்குள் புலமைப்பரிசில் மாணவர்கள் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளனர்.

அந்தவகையில் அந்த மாணவர்களைக் கற்பித்து வழிநடத்திய சகல ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஆசிரியர்களுக்கு கிடைக்கும் அதிக சந்தோசம் அவர்களது மாணவர்களது வளர்ச்சியால் தான்.

இந்தப் பாடசாலையின் மாணவர்கள் மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் தற்போது இடங்களை தக்க வைத்துச் சாதனைகளை புரிந்துள்ளனர். இது பாராட்டப்பட வேண்டியது.

கல்வியோடு சேர்த்து கலை மற்றும் விளையாட்டுக்களிலும் மாணவர்தேர்ச்சியடையவேண்டும்.

இந்த வருடம் சாதாரண தர பரீட்சையை எழுதவுள்ள மாணவர்கள் அனைவரும் தங்களது பரீட்சைக்கு நேர்த்தியாக பங்குபற்றி நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளவேண்டும்.

அத்தோடு இன்று பரிசில்களை பெற்றவர்கள் தொடர்ந்து தங்களது வெற்றியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் ஒவ்வொரு இலட்சியத்தோடு கல்விக்காலத்தில் பயணியுங்கள் .-என்றார்.

குறித்த பாடசாலையில் புலமை பரிசில் சித்தியடைந்த 06 மாணவர்களுக்கு சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளேன் என்று இதன்போது கூறினார்.

அத்தோடு இந்த பாடசாலைக்கு அடுத்த ஆண்டு ஒரு பாண்ட் வாத்தியத்தொகுதியை அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

மதங்களைக் கொண்டு பிளவுபடாமல் ஒற்றுமையோடு எமது கிராமம், எமது நகரம், எமது நாடு என்று சிந்தித்து நமக்காக எந்த வொரு பேதமும் இல்லாமல் வாழ வேண்டும்.

இன்னுயிர்களை ஈகம் செய்த தியாகிகளுடைய தியாகங்களுக்கு அர்த்தம் தேடும் வகையில் மிகுந்த ஒற்றுமையோடு அபிவிருத்திகளை பெற்று உரிமையோடு வாழும் வாழ்வை காண ஒத்துழைக்க வேண்டும்.- என்றார். (ஐ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியாவில் தாக்கப்பட்டார்

வவுனியா, டிசெ.06

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பழையவாடி கிராமத்தில் கடமை நேரத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை புளியங்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் களப் பணிக்காக புளியங்குளம் தெற்கு பழையவாடி கிராமத்துக்குச் சென்ற போது கிராமவாசி ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் வீட்டுத்திட்ட கட்டுமான முன்னேற்றம் தொடர்பாகப் பார்வையிடுவதற்காக பழையவாடி கிராமத்துக்குச் சென்று திட்டம் நடைபெறும் ஒரு வீட்டில் ஒளிப்படம் எடுத்து கொண்டு நின்றுள்ளார்.

இதன் போது அங்கு வந்த நபர் ஒருவர் தகாத வார்த்தைகளால் பேசியவாறு குறித்த அலுவலரை சரமாரியாகத் தாக்கியுள்ளார். சம்பவம் இடம் பெற்ற வீட்டு உரிமையாளர் இதைத் தடுக்காது வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கும் உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தப் பட்டது. புளியங்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தாக்குதல் மேற்கொண்டவர் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் ஞாயிறு காலை விடுவிக்கபட்டுள்ளார் என்று கூறப்பட்டது. (ஐ-100)

# பிடல் காஸ்ட்ரோவுக்கு வவுனியாவில் அஞ்சலி



வவுனியா, டிசெ.06

கியூபா நாட்டின் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிச கட்சியின் வன்னி மாவட்டங்களுக்கான செயலாளர் என்.பிரதீபன் தலைமையில் வவுனியா நகரசபை விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் எழுத்தாளர் கே.கே.அருந்தவராஜா, புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசகட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன், தோழர் இரா.இராஜேஸ்வரன், தோழர் கா.மகேந்திரன், சமூகநீதிக்கானவெகுஜன அமைப்பின் தலைவர் பூ.சந்திரபத்மன், தோழர் ஜீந்தீசன், புதிய சிந்தனை பெண்கள் வலையமைப்பின் தலைவி நி.பிரவீனா ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

இவ்அஞ்சலிநிகழ்வில் பலர் கலந்து கொண்டு தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். (ஐ-100)

# சுதந்திரக் கட்சியின் வவுனியா மாவட்ட செயற்குழுக்கூட்டம்

வவுனியா, டிசெ.06

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வவுனியா மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை வவுனியா ஹொறவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், அக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளருமான கே.கே. மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அது தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது. கட்சியின் மாவட்ட மட்ட செயற்பாடுகள், உள்ளூராட்சி சபையை எதிர்கொள்ளும் முறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினரும் மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் தலைவருமான எஸ்.ஆனந்தராஜா, ஜனாதிபதி அலுவலக இணைப்பாளர்களான ஜகத்கமல்கொட மற்றும் எஸ்.பத்மநாதன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-100)



ஊடகவியலாளர் எஸ்.எம்.சர்ஜான் எழுதிய 'இருட்டறை மெழுகுவர்த்தி' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா ஆண்டியா புளியங்குளம் முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் செட்டிகுளம் பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் வெண்கல செட்டிகுளம் உதவிப் பிரதேசசெயலாளர் எஸ்.முகுந்தன்தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஆண்டியா புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எம்.சர்ஜான் தனது ஊரில் அவர் கற்ற பாடசாலையில் வைத்து இந்த நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், பிரதியமைச்சர் அமீர் அலி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, அயூப் அஸ்மின், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை, இதன்போது சர்ஜான் எழுதிய பாடல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ-100)

# வவுனியாவில் நாவலரின் 137ஆவது நினைவு தினம்



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம், தமிழ் விருட்சம், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில் ஏற்பாடு செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 137 வது நினைவு தினம் இலுப்பையடியில் அமைந்துள்ள நாவலர் பெருமான் சிலையடியில் நேற்று காலை8.30மணிக்கு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் சிலை நிறுவியவரும் முன்னாள் நகரபிதாவும், வடமாகாண சபை உறுப்பினருமான ஜி.ரி. லிங்கநாதன், நகர சபை செயலாளர் இ.தயாபரன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ. பிரதீபன், முன்னாள் உபநகரபிதா க.சந்திரகுலசிங்கம், வரியிறுப்பாளர் சங்க தலைவர் செ.சந்திரகுமார், முன்னாள் பிரதேச செயலாளர் க.ஐயம்பிள்ளை, இறைபணி செம்மல் வை.செ.தேவராசா உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் உட்படபலர்கலந்து கொண்டனர். நிகழ்வில் நாவலர் பெருமானின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய பின் தமிழ்மணி அகளங்கன் நாவலரின் பெருமைகள் பற்றி சொற்பொழிவும் நிகழ்த்தினார். (ஐ-100)

# வலுவிழந்த பிள்ளைகளுக்கு தேசிய கல்விக் கொள்கை

## நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.06

வலுவிழந்த பிள்ளைகளுக்கான தேசிய கல்விக் கொள்கையை அமைப்பதற்கும் வலுவிழந்தவர்களுக்கான சர்வதேச பிரமாணங்கள் மற்றும் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கும் தேவையான நிறுவன மற்றும் சட்டப் பின்புலத்தை அமைக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலுவிழந்தவர் களுக்கான சர்வதேசதினநிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த சனிக்கிழமை பொலனறுவை தேசிய கல்வி விஞ்ஞான பீடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'' நாம் விரும்பும் எதிர் காலத்துக்காக பதினேழு இலக்குகளை அடைந்து கொள்வோம்'' என்ற கருப்பொருளின் கீழ் சமூக வலுவூட்டல், நலன் பேணல் அமைச்சும் வலுவிழந்தவர்களுக்கானதேசிய பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்துள்ளன.

வலுவிழந்தவர் களுக்கான சர்வதேசதினநிகழ்வு ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படுகிறது. 1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை உட்பட ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் சகல நாடுகளிலும் இது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இத்தினத்தை அனுஷ்டிப்பதன் மூலம் வலுவிழந்தவர்கள் தொடர்பான விடயங்களை விளங்கிக் கொள்ளுதல், வலுவிழந்தவர்களின் உரிமைகள் மற்றும் நலன் பேணலுக்காக அனுசரணையை வழங்குதல் ஆகியன எதிர் பார்க்கப்படுகிறன.

வலுவிழந்தவர்கள் சாதாரணமானோரில் தங்கியிருக்க வேண்டியதில்லை. வலுவிழந்தவர்களும் அவ்வாறு அல்லாத சாதாரண பிரஜைகளும் சம உரிமை மற்றும் சலுகைகளுடன் சமூகத்தில் வாழவேண்டும். வலுவிழந்தவர்களின் ஆக்கத்திறன்களை மேம்படுத்துவதற்குத் தேவையான பின்புலத்தை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை நிறைவேற்ற அவர்களுக்கான சர்வதேச பிரமாணங்களையும் உடன்படிக்கைகளையும் அதனையும்தாண்டிய மனிதாபிமானபொறுப்புக்களையும் நிறைவேற்றவும், அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். - என்றார்.

வலுவிழந்த பிள்ளைகளுக்கிடையே 2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்தவர்களைப் பாராட்டுதல், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைப் பாராட்டுதல், வலுவிழந்த புதிய உற்பத்தியாளர்களைப் பாராட்டுதல், பரா ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி திறமையை வெளிப்படுத்திய விளையாட்டு வீரரைப் பாராட்டுதல், செயற்கைக் கால்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் இதன்போது ஜனாதிபதி கலந்து கொண்டார்.

திவிநெகும அபிவிருத்தி அதிகாரிகள், முகாமையாளர்களுக்கு நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன. சமூக வலுவூட்டல், நலன் பேணல் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் பீ. பீ. திசாநாயக்க, முதலமைச்சர் பேசல ஜயரத்ன ஆகியோரும் இந்தநிகழ்வில்கலந்து கொண்டனர். (ஐ)







# மானிப்பாய் இந்துவில் விபுலானந்தர் நிகழ்வு

சுன்னாகம், டிசெ.06

மானிப்பாய் இந்துக்கல்லூரி தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நினைவு தினமும் முத்தமிழ் விழாவும் அண்மையில் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலா தலைமையில் இடம்பெற்றன.

சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படம் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

நிகழ்வில் வரவேற்புரையை தமிழ்ச்சங்கப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரனும் வாழ்த்துரைகளை கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் எஸ். சிவநேஸ்வரன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.பிரதீபன் ஆகியோரும் சிறப்புரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனும் தொடக்கவுரையைத் தமிழ்ச்சங்கப் பொறுப்பாசிரியர் ஞான.திருக்கேதீஸ்வரனும் ஆற்றினர்.

கல்லூரி மாணவர்களின் குழுப்பாடல், அரிவு வெட்டு நடனம், க.தனுஜனின் தனிஇசை ஆகியவற்றுடன், 'இன்றைய இளைய சமூகத்தினருக்கு பெரிதும் வழிகாட்டி நிற்கும் இலக்கியம் கம்பனின் இராமாயணமா? வில்லியின் பாரதமா?' என்னும் தலைப்பிலான பட்டிமன்ற நிகழ்வு சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தலைமையிலும் இடம்பெற்றது.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த யாழ்.விருது யாழ்ப்பாணப்பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

முத்தமிழ் விழா சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெற்றது. நூலுக்கான வெளியீட்டுரையை திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி அதிபர் நா.விஜயசுந்தரம் ஆற்றினார். நூலை கல்லூரி அதிபர் மே.இந்திரபாலா வெளியிட்டு வைக்க முதற்பிரதியைக் 'கொடைக்கோ' ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக் கொண்டார். (ஐ-54)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், டிசெ.06

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 68 ஆவது பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சங்கத் தலைவர் த.யசிந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக பிரதித் தொழில் ஆணையாளர்திருமதிநீலலோஜினி ஜெகதீஸ்வரனும், யாழ். மாவட்டக் கூட்டுறவு உத்தியோகத்தர் ம.கபிலனும் கலந்துகொள்வர்.

ஏனைய விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஒன்றியத் தலைவர் ந.பிரபாகரனும், ஒன்றியச் செயலாளர் ஞா.சுரேந்தரும் கலந்து கொள்வர். யாழ். கிளைக்குட்பட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் தொழில் நிலையங்களை மூடி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-7)



# அரங்கத்திறன் விருத்திப் பயிற்சி

சுன்னாகம், டிசெ.06

வடமாகான பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலக கலாசாரப்பிரிவின் ஒழுங்குபடுத்தலில் சங்கானை பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட நாடக ஆர்வலர்களுக்கான அரங்கத்திறன் விருத்தி நாடக, கூத்து பயிற்சிப் பட்டறை தொல்புரம் காலாலய மண்டபத்தில் கலாசார உத்தியோகத்தர் த.அமலதாஸ் தலைமையில் இடம் பெற்றது. பயிற்சிப் பட்டறை ஆரம்ப நிகழ்வில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநர் எஸ்.ரி. குமரன் நிர்வாக இயக்குநர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர். (ஐ-54

# கொக்கிளாய் விகாரைப் பணி துரிதம்; நல்லாட்சி அரசு, தமிழ் எம்பிக்கள் மௌனம்!

## – தடுக்க முடியாத கையாலாகாத நிலையில் இருதரப்பும் –

முல்லைத்தீவு டிசெ.06

முல்லைத்தீவு கொக்கிளாயில் விகாரை அமைக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு காணி அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பையும் மீறி தொடர்ந்தும் அங்கு கட்டுமானம் இடம்பெற்று வருகின்றது. இது குறித்து காணி உரிமையாளரும் பிரதேச மக்களும் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தங்கள் பூர்வீகக் காணிகளை ஆக்கிரமித்து விகாரை அமைக் கும் செயற்பாட்டை நிறுத்த முடியாத நிலையில் இருக்கும் நல்லாட்சி அரசிலும் அந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கும் தமிழர் பிரதிநிதிகளிலும் தாங்கள் எவ் வாறு நம்பிக்கை வைக்க முடியும் என் றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கொக்கிளாயில் இருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது, அங்கிருந்த திருஞான சம்பந்தர் என்ற தனியாருக்குச் சொந்தமானகாணியை ஆக்கிரமித்த படையினர், அது விகாரைக்கு உரியது என்று கூறி காணி உரிமையாளரை அங்கு குடியேற அனுமதிக்கவில்லை.


அந்தக் காணியில் 2012 ஆம் ஆண்டு முதல் சிறிசம் போதி மகாவிகாரை என்ற பெயரில் புதிய விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தக்காணியில் விகாரை அமைப்பதை நிறுத்தி, காணியை விடுவிக்குமாறு திருஞான சம்பந்தரின் மூத்த மகன் மணிவண்ணதாஸ் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

எனினும் திருஞான சம்பந்தரின் பெயரிலேயே காணி உரிமைப் பத்திரம் இருப்பதாகவும், பெயர் மாற்றிய காணி உரிமைப் பத்திரத்தைப் பெற்ற பின்னர் வழக்கு தொடருமாறும் தெரிவித்த நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், தமது காணி சட்ட விரோதமாக அபகரிக்கப்பட்டு விகாரை அமைக்கப்படுவதைநிறுத்திகாணியைக் கையளிக்குமாறும் மீண்டும் கோரியுள்ள மணி வண்ணன், மாற்றுக் காணி எதுவும் தனக்கு வேண்டாம் என்றும் கூறியிருக்கின்றார். இந்த நிலையில், தற்போது இரவு பகலாக விகாரை அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது. இதற்கு எதிராக ஆரம்பத்தில் குரல்கொடுத்த தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் இப்போது அமைதியாக இருக்கின்றனர் என்று மக் கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம-81)

பொன்.வேணு கிருஷ்ணா

### ட்ரம்ப்பின் தெரிவு கனடா மற்றும் கியூபாவின் உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் கியூபாவுடனான உறவில் அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் கனடா, கியூபாவுடனான நட்புறவை ஒருபோதும் இழக்காது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ஸ்ரூடோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் கியூபாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட கனடா பிரதமர் ஹவானா பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகையிலேயே இந்த விடயத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் தெரிவித்த அவர், ட்ரம்ப்பின் ஜனாதிபதித் தெரிவு கனடா மற்றும் கியூபாவுக்கான உறவில் எந்தவிதத்திலும் தாக்கம் செலுத்தாது என்று சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, 1959 ஆம் ஆண்டு புரட்சியைத் தொடர்ந்து கியூபா நட்புறவைப் பேணும் நாடுகளில் ஒன்றாக கனடா காணப்படும் அதேவேளை, அமெரிக்கக் கண்டத்தில் கியூபாவுடன் அதிக நட்புறவை வெளிப்படுத்தும் நாடாக விளங்குவதும் கனடாவே என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் போது உரையாற்றிய ஜஸ்டின் ஸ்ரூடோ, ''என்னைப் பொறுத்தவரை அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் தெரிவானமை கனடாவுக்கும் கியூபாவிற்கும் இடையிலான நீண்டகால நட்பை எந்த விதத்திலும் பாதிக்காது. மேலும், இந்த இரு நாடுகளுக்கும் இடையில் இதுவரை காலமும் தொடர்ந்த கலாசார, வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் அனைத்தும் அதே போன்று தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்'' என்றார்.

### பிடல் காஸ்ட்ரோவின் ...தனைகளை எடுத்துக் கூறுவது தவறல்ல - கனேடியப் பிரதமர்

மற்றந்த கியூபாவின் புரட்சியாளரும், நீண்ட காலம் பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதியுமான பிடல் காஸ்ட்ரோவின், சாதனைகளை எடுத்துக் கூறுவது ஒன்றும் தவறான காரியம் அல்ல எனப் பிரதமர் ஜெஸ்டின் ரூடோ தெரிவித்துள்ளார்.

மடகஸ்காரில் இடம்பெறும் அனைத்துலக மாநாடு ஒன்றில் பங்குபற்றச் சென்றுள்ள பிரதமர் அங்கு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அதிலும் கனடாவுடன் மிகவும் நீண்ட கால உறவினைக் கொண்ட ஒரு நாட்டின் தலைவர் மறைந்துள்ள நிலையில், அவரின் மறைவை ஒட்டி விடுக்கப்படும் இரங்கல் செய்தியே அது எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

பிடல் காஸ்ட்ரோவின் ஆட்சியினால் அல்லது அரசாங்கத்தினால் பாதிப்புக்களை எதிர்நோக்கியோர் வேறு விதமாகவே சிந்திப்பார்கள் என்பதனை தம்மால் புரிந்து கொள்ள முடிவதாகவும் அவர் விவரித்துள்ளார்.


இதேவேளை கியூபாவில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்களைத் தாம் ஒருபோதும் புறந்தள்ளி விடவில்லை எனவும், அண்மையில் தாம் மேற்கொண்ட கியூபா பயணத்தின் போதும் அதனை வலியுறுத்தியுள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரதமர் ரூடோ டுவிட்டரில் பதிவிட்டிருந்த இரங்கல் செய்தியில், பழம்பெரும் புரட்சியாளர் மற்றும் சொற்பொழிவாளர் பிடல் காஸ்ட்ரோ எனக் குறித்து பதிவிட்டிருந்தார். மேலும், அவர் தன்னுடைய தந்தைக்கு நல்ல நண்பர் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

காஸ்ட்ரோவின் புரட்சி மற்றும் கொள்கைகள் தொடர்பில் இரு வேறு கருத்துக்கள் பரவலாக காணப்படுகின்ற நிலையில், ரூடோவின் இரங்கல் செய்திக்குப் பல தரப்பிலும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிடல் கஸ்ட்ரோவின் அஸ்திக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதியான பிடல் காஸ்ட்ரோவின் அஸ்திக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். கியூபப்புரட்சியின் தந்தையான பிடல் காஸ்ட்ரோ கடந்த வாரம் தனது 90ஆவது வயதில் காலமானார். பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்வின் ஆரம்ப அம்சமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இராணுவ மரியாதையுடன் ஹவானா மற்றும் சான்டியாகோவில் பேரணிகள் ஆரம்பமாகின.



22

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

சான்டியாகோவில் 1959ஆம் ஆண்டு பிடல் காஸ்ட்ரோ அதிகார பூர்வமாக கியூப புரட்சியை அறிவித்தார்.

காஸ்ட்ரோவின் தேசியவாத மற்றும், சோசலிசதத்துவங்களையும் இறுதிவரை கடைப்பிடிப்பதற்கான உறுதிமொழி ஒன்றில் துக்கம் அனுஷ்டித்தவர்கள் கையெழுத்திட்டனர்.

எதிர்வரும் 30.12.2016(புதன்) முதல், போர்களின்போது காஸ்ட்ரோவின் புரட்சியாளர்கள் பயணித்த பாதை வழியாகக் காஸ்ட்ரோவின் அஸ்தி எடுத்து செல்லப்படவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அவருடைய அஸ்தி இறுதியாக சான்டியாகோவிற்கு கொண்டுசெல்லப்பட்டு இறுதி கிரியைகள் நடைபெறவுள்ளன.


இதேவேளை, பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என வட கொரியா நேற்று அறிவித்திருந்தது.

காஸ்ட்ரோவுக்கு மரியாதை செலுத்தும் முகமாக தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனவும் வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

''ஒரு புரட்சிக்காரன்... கலகம் என்பதையே வாழ்க்கையாக ஆரம்பித்து, போராட்டம், மோதல் என்பவற்றையே



பிடல் காஸ்ட்ரோவுடன் ரவுல் காஸ்ட்ரோ(இடது) 1977 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது



நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழும் தனக்குப் பின்னர் தனது சகோதரன் ராவுல் கஸ்ட்ரோவை நாட்டின் ஆட்சியில் அமர்த்தினாலும் முணுமுணுப்புக்கள், விமர்சனங்கள் இல்லை. 90 வயதில் இறக்கின்ற இந்த மனிதருக்கு கியூபாவின் எல்லைகள் தாண்டியும், மொழிகள், இனங்கள் கடந்து அஞ்சலிகளும் புகழ் மொழிகளும் பொழிந்து கொண்டிருக்கின்றன.

தனது வழிமுறையாகக் கொண்டு - கியூபா என்ற தீவின் ஆட்சி அதிகாரத்தை ஐந்து தசாப்தங்களாகத் தனது இரும்புக் கரத்தினுள்ளே வைத்திருந்த ஓர் இராணுவ உடையணிந்த சர்வாதிகாரி''. என்று அவரை விமர்சிப்போர் எராளம்

### ஏன்? எப்படி?

என்னதான் புரட்சிகள், போராட்டங்கள், சமூக விடுதலை, மக்கள் விடுதலை என்பவற்றை நிகழ்த்தி தலைவர்களாக




ஆட்சிப் பொறுப்பை ஏற்படுத்தியிருந்தாலும், அவர்களது வரலாறுகளைப் பாருங்கள்... அவர்களது (பதவிகளின்) இறுதிக் காலங்கள் அவர்களால் ஆளப்பட்ட மக்களால் வெறுத்து, விலக்கப்பட்ட அல்லது விரட்டியடிக்கப்பட்டவர்களாகவே அமைந்திருக்கும். புரட்சியின் மூலம் மக்களுக்காக மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிகள், பின்னாளில் தங்களது தனிப்பட்ட செல்வாக்கினுடனான சொந்த சொத்துடைமையாக மாற்றிக் கொண்ட நடைமுறை உலகின் ஒவ்வொரு மூலையிலும் நடந்து வந்திருக்கிறது.

மக்கள் நலன்கள் பின்தள்ளப்பட்டு தமது ஆட்சியிருப்பும், சொந்த நலன்களும் முதன்மை பெறுவதாலேயே அநேக புரட்சித் தலைவர்களும், போராட்டத் தலைவர்களும் பின்னாளில் சுயநல, எதேச்சாதிகார சர்வாதிகாரிகளாக உருமாறி வரலாற்றின் ஏடுகளில் இகழ்ந்து வெறுக்கப்படுவோராக மாறி நிற்கின்றனர். ஆனால், ஒரு சர்வாதிகாரிக்கு எதிராகத் தனது இளமைக் காலத்தில் போராட்ட வாழ்வை ஆரம்பித்த பிடெல் காஸ்ட்ரோ போராடி வென்று தலைவனாக மாறிய பிறகு, தேர்தலோ (ஆட்சித் தலைமைக்கான), ஆட்சி மாற்றமோ இல்லாமல் ஐந்து தசாப்தங்கள் ஆண்ட ஒருவரைப் பற்றி பெருமையாக, 'இவன் தான் தலைவன்', 'காஸ்ட்ரோ போல ஒரு தலைவன் கிடைப்பதரிது' என்று காஸ்ட்ரோ பின்பற்றிய சித்தாந்தங்கள் பிடிக்காதோரும் கூடச் சொல்லிப் போற்றுகின்றனர் என்றால் அதன்பின் இருப்பதுதான் இந்த மனிதரின் அரசியல் வாழ்க்கையின் வெற்றி என்று சொல்லவேண்டும்.

11 மில்லியன் மக்கள்தொகை கொண்ட கியூபா, சர்வாதிகாரிகளால் ஆளப்பட்ட, ஆளப்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய நாடுகள் போலல்லாமல் சகலவிதமான அளவீடுகள், தேர்ச்சி சுட்டெண், வசதி, வாய்ப்புக்கள், தராதரங்கள் போன்றவற்றில் உயர்தரத்தைப் பேணியது. 1959 இல் இடம்பெற்ற கியூபப் புரட்சிக்குப் பிறகு படிப்படியாகவும், 99-2000ஆம் ஆண்டுக்குப் பிறகு சடுதியாகவும் கியூபா வளர்ச்சி கண்டே வந்திருக்கிறது. இலங்கையை விட சற்றே பரப்பளவில் பெரிய நாடு. சனத்தொகை இலங்கையில் பாதி. இலங்கையின் சனத்தொகை 22.235 மில்லியன் (July 2016 இல்). எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மனித வள அபிவிருத்திச் சுட்டெண் என்ற அளவீடுகளில் எல்லாம் அபிவிருத்தியடைந்த நாடுகளோடு போட்டி போடுமளவுக்கு கியூபா முன்னேற்றம் கண்டே வந்துள்ளது.

### உலக வரைபடத்தில் கியூபா

மருத்துவ வசதிகளில் அமெரிக்காவுக்குச் சவால் விடக் கூடியளவுக்கு மாபெரும் முன்னேற்றம். 1000 மக்களுக்கு 5.59 வைத்தியர்கள் என்ற கணக்கில் அமைந்த சுகாதார சேவையை மற்ற நாடுகள் வியந்து பார்த்தன. (அமெரிக்காவில் 1000 பேருக்கு 2.39 என்ற கணக்கு) இதுபோல தான் கல்வி, வேலைவாய்ப்பு, தொழிநுட்ப வசதி என்ற சகலதுறைகளிலும் கியூபா தன்னிறைவு கண்டு முன்னிலையில் திகழ்ந்தது.




அமெரிக்க - ரஷ்ய பனிப்போர் காலம் முதல், ரஷ்ய ஆதரவுப் போக்கு, கம்யூனிச சித்தாந்தத்தைக் கடைக்கொண்டமை ஆகிய காரணங்களால் பல்வேறு பொருளாதாரத் தடைகளுக்குள்ளாகி தனித்துவிடப்பட்ட கியூபா, அதையெல்லாம் தாண்டி இத்துணை வளர்ச்சி கண்டிருக்கின்றதென்றால் அதற்கு காஸ்ட்ரோ தன்னுடைய இரும்புப்பிடி ஆட்சியுடன் நீண்டகால திடமான வியூகத்தையும் கொண்டிருந்தமை தான் காரணம்.

(கேள்வி தொடரும்...)

# அதிகாரத்தின் அரூப கரங்கள்

“நான் எனது தந்தையை மிகவும் ஆழமாக நேசித்தேன். அவர் அனுபவித்த துன்பம் எனது மனதை புண்படுத்தியது. கடைசி நாள்களில் அவர் பட்ட துயரமும் சோதனையும் என்னை ஆழமாகப் பாதித்தன. இது பற்றிய எண்ணங்களே என்னை முழுமையாக ஆட்கொண்டது. ஒரு மாதத்துக்கு முன்னரே அந்த பயங்கரத் திட்டம் பற்றி நான் எனது மனதில் ஒரு படத்தை வரைந்துகொண்டேன். எனது தாய், சகோதரன், சகோதரி மீது நான் அன்பும் மதிப்பும் கொள்ள வேண்டும் எனக் கூறும் அறப் பண்புகள் எனது மனதிலிருந்து மறைந்து கொண்டன. விசர் நாய்களின், கொடிய விலங்குகளின் அதிகாரப் பிடிக்குள் சிக்கி அவலப்பட்டுவரும் எனது தந்தைக்காக ஆயுதம் ஏந்த வேண்டும் என நான் நினைத்தேன். இப்படியான கொடும் செயலை மதமானது தடை செய்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் மதத்தின் நெறிகளை நான் கருத்தில் எடுக்கவில்லை. என் மூலமாக தனது தெய்வீக நீதியை நிறைவு செய்ய இறைவன் விதித்திருக்கலாம் என்றும் கூட எண்ணினேன். மனிதர்களின் தர்மம் பற்றியும் சமூக ஒழுங்கமைப்பின் விதிகள் பற்றியும் நான் அறிவேன். மனிதர்கள் மானங்கெட்டவர்கள்; இழிசனர்கள்; இவர்களைவிட நான் புத்திசாலி... நான் மனித சட்டங்களை மறுதலிக்கத் துணிந்தேன். எனது தந்தைக்காக எனது உயிரையும் அர்ப்பணிப்பதில் நான் அழியாப் புகழையும் இறவா நிலையையும் அடையலாம் என நினைத்தேன்... ஓர் அரசனுக்காக, ஒரு நாட்டுக்காக எத்தனையோ போர் வீரர்கள் மடிந்துபோகிறார்கள்... மன்னனைத் தெரியாதவர்கள் மன்னனின் இலட்சியத்துக்காக மடியும் பொழுது, நான் நேசித்து வழிபடும் என் தந்தைக்காக, என் தந்தையின் விடிவுக்காக எனது உயிரை மாய்த்துக்கொள்ளக் கூடாதா?... இப்படியான எண்ணங்கள் எனது மனத்திரையில் ஓடி, எனது செயலுக்கு தூபம் இட்டன...” என்று எழுதியிருக்கிறான் ரிவியே.

இது ஒரு பைத்தியக்காரரின் அர்த்தமற்ற பிதற்றலல்ல என்கிறார் பூக்கோ. ரிவியேயின் எழுத்துக்களில் ஒரு தர்க்கீகம் இழையோடுகிறது. காரணகாரியத் தொடர்புடையதான ஓர் உள்நோக்கம் இருக்கிறது. அவனது எழுத்துக்களின் ஒரு விபரீதமான ஆசை புதைந்து கிடக்கிறது. அந்த விபரீதமான ஆசைக்கும், எழுத்துக்கும், செயலுக்கும் மத்தியில் பிரிக்கமுடியாத ஒரு தொடர்பு இருக்கிறது. இவற்றுக்கெல்லம் கதாநாயகன் அவனேதான். அந்த கதாநாயகனின் குரலை, தனது செயலுக்கு அர்த்தம் கற்பிக்கும் தர்க்கீகத்தை சமூக உலகமானது கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் பூக்கோ. சமூகத்துக்கு ஒரு தர்க்கீகம் இருக்கிறது. நியாயப்பாடு இருக்கிறது. நியமம் இருக்கிறது. அந்த தர்க்கீகத்துக்கும் நெறிகளுக்கும் பொருந்தாத குரல்களை, பைத்திய உலகத்தின் இருள் அறைக்குள் மூடி விடுகிறது சமூகம். அப்படியான ஒரு மனிதக் குரலையே வரலாற்றின் புதைகுழியில் இருந்து மீட்டெடுக்க முனைந்திருக்கிறார் பூக்கோ.

வழக்காடல் என்ற சமூக நிகழ்வில் சொல்லாடல் நிகழ்கிறது. அறிவுலக நிபுணர்களின் கருத்துப்போர் நிகழ்கிறது. அறிவுலகங்கள் ஒன்றோடொன்று பலப்பரீட்சை நடத்தி அதிகார உலகத்துக்கு சேவையாற்றும் ஒரு விந்தையான ஒரு நிகழ்வே இங்கு இடம்பெறுகின்றது. நீதி தேவன் குடியிருக்கும் கோவிலல்ல நீதி மன்றம். அது அதிகாரம் கோலோச்சும் நிறுவனம். இங்கு அறிவுலக நிபுணத்துவம் அதிகாரத்தை நியாயப்படுத்தி அதிகாரத்தின் கரங்களை வலுப்படுத்த முனைகிறது. அறிவும் அதிகாரமும் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றும் ஒரு சமூக நாடகமாகவே பியர் ரிவியேயின் கொலை வழக்கை சித்திரிக்கிறார் பூக்கோ. இது கதாநாயகனின் கருத்தாடல் நிகழாத ஊமை நாடகம் என்பது அவரது கருத்து.

நீதி முறை பற்றியும் குற்றவியல் பற்றியும் தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திய பூக்கோ, 1975இல் 'ஒழுங்கும் தண்டனையும்; சிறையில் பிறப்பு" (Discipline and Punish: The Birth of The Prison) என்ற நூலை வெளியிட்டார்.

ஆரம்பத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த ஆய்வு நூல் ஈற்றில் பூக்கோவுக்கு அனைத்துலக புகழை ஈட்டிக் கொடுத்தது.

தண்டனையின் சகல பரிமாணங்களையும் இந்த நூல் அகழாய்வு செய்கிறது. தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் உத்தி. சமூகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை. தண்டனையானது எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இருந்து வருகிறது. அன்றொரு காலம் உடலை வதைக்கும் உத்தியாக கையாளப்பட்ட இந்தநடைமுறை, இன்று'ஆன்மாவை' சீர்திருத்தும் ஒழுங்கு முறைகளைக் கொண்டதாக புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது. இன்று தண்டனையின் முகம் மாறியிருக்கிறது. தண்டிக்கும் உத்திகள் மாறியிருக்கின்றன. தண்டனை என்ற போர்வையில் அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில் மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி சமூகப் பொம்மைகளாக மாற்றி வருகிறது. அதிகாரத்தின் இந்தச் செயல்நுட்ப வளர்ச்சிக்கு அறிவுலகங்கள் துணைபோகின்றன. இந்த மையக் கருத்தையே இந்நூல் மிகவும் திறம்பட எடுத்து விளக்குகிறது. இது பற்றி இனி விவரமாகப் பார்ப்போம்.

> “ தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் உத்தி. சமூகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை. தண்டனையானது எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இருந்து வருகிறது. அன்றொரு காலம் உடலை வதைக்கும் உத்தியாக கையாளப்பட்ட இந்த நடைமுறை, இன்று 'ஆன்மாவை' சீர்திருத்தும் ஒழுங்கு முறைகளைக் கொண்டதாக புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது. இன்று தண்டனையின் முகம் மாறியிருக்கிறது. தண்டிக்கும் உத்திகள் மாறியிருக்கின்றன. தண்டனை என்ற போர்வையில் அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில்மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி சமூகப் பொம்மைகளாக மாற்றிவருகிறது.

* * *

உடலை வதை செய்யும் கொடூரத்தில் இருந்து உள்ளத்தை வனையும் ஒழுங்கு முறை நுட்பமாக தண்டனையின் தந்திரோபாயம் மாற்றம் கண்டிருக்கும் வரலாற்றுக் கதையை 'ஒழுங்கும் தண்டைனையும்' எடுத்துரைக்கிறது. அன்றைய காலத்து ஒரு கோரமான மரண தண்டனையை விவரணம் செய்து தனது நூலை ஆரம்பிக்கிறார் பூக்கோ.

**3**

1757ஆம் ஆண்டு, மார்ச் மாதம் பிரான்ஸ் நாட்டில் நிகழ்ந்த சம்பவம் அது. லூயி மன்னனை கொலை செய்ய முயற்சித்தான் என டேமியன் என்ற பொதுமகன் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஒரு பேனாக் கத்தியால் தாக்கி பிரெஞ்சு மன்னனுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியிருந்தான் டேமியன். ஆயினும் அரச கொலை முயற்சி எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவனுக்குப் பகிரங்க மரண தண்டனை விதிக்கப்பட்டது. இம் மரண தண்டனை எவ்வித மான உடல்வதையுடன் நிறைவு செய்யப்படவேண்டும் என்பதை அன்றைய அரச கட்டளை கீழ்க்கண்டவாறு விதித்தது.

“வெந்தணலில் வேகிய குறடுகளைக் கொண்டு அவனது மார்பிலிருந்தும், புயத்திலிருந்தும், தொடையிலிருந்தும் தசைகள் பிய்த்து எடுக்கப்படவேண்டும். தசைகள் கிழிக்கப்பட்ட காயங்கள் மீது உருக்கிய ஈயமும், கொதிக்கும் எண்ணெய்யும் ஊற்றப்படவேண்டும். மன்னனை கொலை செய்யும் நோக்குடன் கத்தி ஏந்திய அவனது வலது கரத்தை கந்தக அமிலத்தால்எரியூட்டி பொசுக்கவேண்டும். பின்னர் அவனது கைகளையும் கால்களையும் நாற்கோணமாக, நான்கு குதிரைகளில் கட்டி இழுத்து, நான்கு துண்டங்களாக அவனது உடலைப் பிய்த்து எறிய வேண்டும். ஈற்றில் துண்டாடப்பட்ட சதை பிண்டங்களை ஒன்று குவித்து அதனைத் தீ மூட்டி எரிக்கவேண்டும்.”

இந்தக் கோரமான சித்திரவதை எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்ற விவரத்தையும் அந்தக் கொடுமைக்கு ஆழான மனிதன் கூச்சலிட்டு குழறியழுது துடிதுடித்து இறந்த கோரத்தையும் அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் எழுதிய குறிப்புக்களில் இருந்து விவரிக்கிறார் பூக்கோ. உடல் வதையை தாங்க முடியாது, “கடவுளே, என்மீது இரக்கம் காட்டும் இயேசுவே என்னைக் காப்பாற்றும்” என அவன் வான் அதிரக் கத்தியபோது அங்கு நின்ற ஒரு வயோதிபக் குருவானவர் கூட அவனுக்கு ஆறுதல் கூறத் துணியவில்லை. இறுதியில் நான்கு கோணத்திலுமாக நான்கு குதிரைகள் நிறுத்தப்பட்டு, அவன் கைகளிலும் கால்களிலும் கயிற்றினால் கட்டி இழுக்கப்பட்டபோது அவனது ,கை,கால்கள் கிழிபடவில்லை. நீண்ட நேரமாக பல தடவைகள் குதிரைகளைக் கொண்டும் முயன்றும் முடியவில்லை. இறுதியில் அவனது கை, கால்களை கத்தியால் வெட்டி துண்டித்து, துண்டாடப்பட்ட தசை பிண்டங்கள் மீது விறகுகள் குவித்து தீ மூட்டி எரிக்கப்பட்டதாம். இந்த பகிரங்க மரண தண்டனையை நிறைவு செய்ய பல மணி நேரம் சென்றதாம்.”

உடல் உபாதையின் உச்சமாக இந்த மரண தண்டனை அமைந்தது. குற்றத்தை மிஞ்சியதாக டேமியனுக்கு இக்கொடூர தண்டனை வழங்கப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அக்காலத்தில், பழைய ஐரோப்பிய ஆட்சியமைப்பில், தண்டனையானது மனு நீதியின் அளவுகோலால் தீர்மானிக்கப்படவில்லை. மாறாக அது ஓர்அரசியல் யுக்தியாக, அரச ஆட்சியின் அதிகாரத்தை குறியீடு செய்வதாக அமைந்தது என்கிறார் பூக்கோ. அன்றையகருத்துலகமும்அரசஆட்சியை அலாதியான முறையில் நியாயப்படுத்தி நின்றது. அரசன்என்பவன்ஆண்டவனின் பிரதிநிதி என்றும், அவனது ஆளும் அதிகாரம் அவனுக்கு அருளப்பட்ட தெய்வீக உரிமை என்றும், முடியாட்சி என்பதும் பூமியில் நிகழும் இறையாட்சி என்றும், கருத்துக்கள் விதையூன்றிய காலமது. எனவே அரசனை எதிர்ப்பது மகா பாதகமான குற்றம். அது ஆண்டவனை எதிர்ப்பதற்கு நிகர். தெய்வீகத் திருவருளால் நிகழும் முடியாட்சியை மறுப்பதற்கு நேர். இது மரண தண்டனைக்குரிய குற்றம். இம் மரண தண்டனை குடிமக்களுக்கு குலைநடுக்கத்தைக் கொடுப்பதாக அமைய வேண்டும். கடும் எச்சரிக்கையாக அமைய வேண்டும். அத்தோடு அரச அதிகாரத்தை, மேலாதிக்கத்தை குறியீடு செய்வதாக இருக்க வேண்டும். இதற்கு இரு வழிமுறைகள் கையாளப்பட்டன. ஒன்று மிகக் கொடூரமான உடல் வதையாகத் தண்டனை நிறைவேற்றுவது மற்றது தண்டனையைப் பகிரங்கமான முறையில் வெகுசனக் கண்காட்சியாக நிகழ்த்துவது. இந்தவகையில் பகிரங்க மரண தண்டனை என்பது ஒரு சூசகமான அரசியல் நாடகம் என்கிறார் பூக்கோ. ஒரு குறியீட்டு அரசியல் நாடகம். இதன் கதாநாயகன் மரணத்தை சுமந்துநிற்கும் குற்றவாளியல்ல. வெகுசனமே இந்த நாடகத்தின் பிரதான பாத்திரம். இங்கு பொதுமக்கள் சாட்சிகளாக மட்டும் நிற்கவில்லை. அவர்களும் இப் பகிரங்க நாடகத்தில் பங்குகொள்கிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு, ஆவேசப்பட்டு குரலெழுப்பி மக்களும் இந்த நாடகத்தில் பாத்திரம்ஏற்கிறார்கள்என்பதுபூக்கோவின் வாதம்.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# பாதாள உலகத் தலைவர் கொலை; எழு பேர் கைது!



கொழும்பு, டிசெ.06

மினுவாங்கொட - உன்னாருவ பிரதேசத்தில் செயற்பட்டுவந்தார் என்று கூறப்பட்டு, கடந்த 24ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவின் தலைவர் சுசந்த பிரடி சில்வா எனப்படும் பிரடியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேரை நீர் கொழும்பு பொலிஸார் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மூன்றும் துப்பாக்கிகள் உள்ளிட்ட சில ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த கோப்ரல் சிசிரகுமார அழககோன் (வயது 40) என்பவரே பணத்தைப் பெற்றுக் கொண்டு, பாதாள உலகக் குழுவின் தலைவர் பிரடி சில்வாவை கொலை செய்தார் என்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. கொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர் பிரடிக்கும் நிலந்த மெண்டிஷுக்கும் இடையில் வான் ஒன்றை வாங்கியமை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையே இந்தக்கொலைச் சம்பவத்துக்குக் காரணம் என்று மேலும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் அறுவரை மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்திலும் ஆயுதங்களை வைத்திருந்த சந்தேக நபரை கட்டானை பொலிஸ் நிலையத்திலும் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(எ)

# நிதி நெருக்கடியில் திணறும் இலங்கை

## முன்னாள் அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, டிசெ.06

நாடு பெரியளவில் நிதி நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாகத் தலையீடு செய்து தீர்வு வழங்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்நியச் செலாவணிப் பிரச்சினை பெரியளவில் உக்கிரமடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி தொடர்பான அடிப்படை விடயங்கள் மூடி மறைக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் சில மாதங்களில் அமெரிக்க டொலரின் பெறுமதி 160 ஆக உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதனால் நாட்டில் பொருள்களுக்கான விலைகளும் பெரியளவில் உயர்வடைய கூடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

## உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு பெரியளவில் போராட்டம்

### கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.06

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னதாக நடத்தக் கோரி நாடு தழுவிய ரீதியில் பெரியவில் போராட்டங்கள் நடத்தப்படும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

இதன் போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துமாறு கோரி போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தி விரட்டப்பட்டவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே.

அவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்த வேண்டும்.''என்றார். (எ)

## அனுமதியின்றி மரங்கள் வெட்டி விற்ற ஐவர் கைது!

மஹியங்கனை, டிசெ.06

மஹியங்கனை, ரிதி மால்யத்த யல்வேல பிரதேசத்தில், அனுமதிப் பத்திரமின்றி மரங்களை வெட்டி விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டின் பேரில், 5 பேரை, பதுளை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

மரம் அறுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரவாள் உள்ளிட்ட பல பொருள்களையும் மேற் படி ஐவரிமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஊவா திஸ்ஸபுர, யலேவல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இதன்போது கைது செய்யப்பட்டனர். (எ)

## தினசரி ராசி பலன் 06.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 - 8.45 |
| | மாலை : 5.00 - 6.00 |
| ராகு காலம் | : 3.00 - 4.30 |
| குளிகன் | : 12.00 - 1.30 |
| எமகண்டம் | : 9.00 - 10.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம்,தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்:** அன்பு உறவுகளிடம் உணர்வுமிக்க பாசங்களினால் ஆளும் நாள்.

**ரிஷபம்:** பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும்.

**மிதுனம்:** சினம் - அசுர குணம் மிளிரும், அன்பு குறையும். அனைவரிடத்திலும் அமைதியுடன் விலக நலம் நல்கும்.

**கடகம்:** நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள்.

**சிம்மம்:** நற்செயல் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்கள் அனைத்திலும் நிதானத்துடன் செயற்படவேண்டிய நாள். சந்திராஷ்டமம் : மகம்.

**கன்னி:** ஆதாயம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**துலாம்:** விருப்பம் - நினைத்த காரியங்கள் யாவும் செம்மையாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** சிரமம் - சோம்பலினால் சுகம் குறையும் மகிழ்ச்சி குறையும், முயற்சித்தால் நலம் ஏற்படும்.

**தனுசு:** போட்டி - இன்று தொழில் முறையில் போட்டிகள் நிலவும்.

**மகரம்:** சோதனை - திடீர் சிரமங்கள், கவலைகள், சோதனை ஏற்படும்.

**கும்பம்:** நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**மீனம்:** நற்செயல் - எண்ணங்களும், செயல்களும் வெற்றியையே தரும்.

## தேவையற்ற எதிர்ப்புப் போராட்டம் நடத்த இடம் அளிக்க வேண்டாம்

### இப்படிக் கூறுகிறார் சமூக மேம்பாட்டு அமைச்சர் திஸாநாயக்க

கொழும்பு, டிசெ.06

தேவையற்ற எதிர்ப்புப் போராட்டங்களுக்கு இடமளிக்கப்படக் கூடாது என்று சமூக மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனாவசியமான முறையில் மேற் கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்புப் போராட்டங்களைக் கலைத்து விரட்ட வேண்டும் என்று அவர் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"அரசாங்கம் நல்ல விடயங்களைச் செய்ய முயற்சிக்கும் போது அதில் குறை காணும் அடிப்படைவாதிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அவர்கள் நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிப்பதில்லை.

இந்தக் கடும்போக்காளர்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் இடமளிக்காது.'' என்றார் அவர். (எ)

## முதன் முறை பெந்தோட்டையில் பிடிபட்டன பெரிய மீன் வகைகள்



கொழும்பு, டிசெ.06

மீன்பிடி வரலாற்றில் காலி மாவட்டம் பெந்தோட்டைப் பகுதியில் மிகப்பெரியளவிலான மீன்கள் சிக்கியுள்ளன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மீன்பிடிக்காகச் சென்ற 7 மீனவர்கள் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெரிய மீன்களைப் பிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடி வரலாற்றில் இதுவரையில் இவ்வாறான மீன்கள் அகப்பட்டமை, இதுவே முதல் தடவை என்றும், சுமார் 4 கிலோ மீற்றர் கடற்பரப்புக்குள் தான் இவை அகப்பட்டன என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (எ)

## ஞானக் குழந்தைகள் இல்லக் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.06

பாலர் கல்விக் கழகமும், 9 ஞானக் குழந்தைகள் இல்லப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் 50ஆவது வருடாந்தக் கலை விழாவும், பட்டமளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு, யாழ்.இல 37, சேர் பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ்சுஸ்வதிமண்டபத்தில் இடம்பெறும்.

கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன்தலைமையில்இடம் பெற்றுவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பீடசிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் கலந்து கொள்வார். (இ-7)

# கொடுக்கிளாய் - இயக்கச்சி கடல் நீரேரிக்கு ஊடாக வீதி

## ரூபா 76 லட்சம் செலவில் புனரமைப்பு

பருத்தித்துறை, டிசெ.06

வடமராட்சி கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் மக்களால் அமைக்கப்பட்ட கொடுக்கிளாய் - இயக்கச்சி வீதியை நிரந்தர வீதியாக மாற்றிப் புனரமைக்க முதல் கட்டமாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடல்நீரேரிக்கு ஊடாக அமைக்கப்பட்ட 1.5 கிலோ மீற்றர் தூரமான இவ் வீதி புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் சுமார் 76 லட்சம் ரூபா செலவில் நிறைவு செய்யப்பட்டு அண்மையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ந.வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இவ்வீதியை நிரந்தர வீதியாகப் புனரமைப்புச் செய்வதற்கே அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இ-31





அடையாளம் - கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் ஆவணப்பட இயக்குநரும் ஊடகவியலாளருமான ஜெராவின் 'நிலம் இழந்த கதைகள்' நூல் வெளியீட்டுவிழா சனிக்கிழமை மாலை கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அடையாளம் நிறுவனத்தில் நடைபெற்றது.

அடையாளம் நிறுவன ஏற்பாட்டாளர்களில் ஒருவரான கு.குருபரனின் அடையாளம் பற்றிய சிறு உரையாடலுடன் தொடங்கிய நிகழ்வில் நூல் வெளியீடு மற்றும் நூலாசிரியர் ஜெராவின் கருத்துப் பகிர்வுகளையடுத்து நிலம் இழந்த கதைகள் தொடர்பில் திறந்த உரையாடல் ஒன்றும் நடைபெற்றிருந்தது.

# சரியான தலைமை தமிழருக்கு இல்லை அரசியல் ரீதியில் அங்கவீனர்கள் நாம்!

## வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



விடுதலைப்புலிகளின் காலத்தில் தமிழ்மக்களுக்கு வலுவானதோர் அரசியல் தலைமைத்துவம் இருந்தது. இன்று, அத்தகைய பலம் வாய்ந்த, தமிழ்மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தலைமை இல்லை. இந்த நிலையில் அரசியல் ரீதியாக நாங்கள் அங்கவீனர்களாக உள்ளோம்.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கருவி அமைப்பால் கடந்த சனிக்கிழமை சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காது கேட்காதவர்களையும், கண்பார்வை இல்லாதவர்களையும், வாய் பேச முடியாதவர்களையும், உறுப்புகளை இழந்தவர்களையும் நாங்கள் அங்கவீனர்கள் அல்லது மாற்றுத்திறனாளிகள் என்கிறோம்.

இந்தக் குறைபாடுகளை நினைத்து எவரும் அவநம்பிக்கை கொள்ள வேண்டாம். நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் இவற்றை வெல்ல முடியும்.

மாற்றுத்திறனாளிகள் தங்கள் தன்னம்பிக்கையை ஊன்றி நிமிர்ந்தெழுவதற்குப் பொருத்தமான ஆதார அடித்தளம் தேவை. அதனை அமைத்துத் தரவேண்டிய பொறுப்பு வடமாகாண சபையினராகிய எங்களுக்கு உள்ளது.

### மாகாண சபையும் கூட அங்கவீனமான நிலையிலேயே

ஆனால், மாகாணசபையே அங்கவீனமாகத்தான் உள்ளது. தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்குரிய தீர்வாக முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்கு முழுமையான அதிகாரங்கள் இல்லை. குறைப் பிரசவமான இதனை வைத்துக் கொண்டு எங்களால் நிறைவாகச் செயற்பட முடியவில்லை.

மாற்றுத்திறனாளி ஒருவரால் காளான் செய்கையில் இலகுவாக ஈடுபட முடியும். சிறிய அளவில் இதனை மேற்கொள்வதற்குக் கூட ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமாகத் தேவை. ஆனால், விவசாய அமைச்சுக்குத் தனிப்பட்ட ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கான உதவிகளை வழங்குவதற்கு மாத்திரமே மத்திய அரசின் அனுமதி இருக்கிறது. மீதிப் பணத்தை பயனாளியிடம் வசூலிக்கச் சொல்கிறார்கள். போரால் நிர்க்கதியாகி நிற்கும் ஒருவரால் அந்தப் பணத்தைச் செலுத்த முடியாமல் இருப்பதால் திட்டத்தை எங்களால் முழுமையாகச் செயற்படுத்த இயலாமல் உள்ளது.

மாகாண சபைகள் மாத்திரம் அல்ல, அரசியல் வாதிகளான நாமும் சகல புலன்களும் இயங்கப்பெற்றும் அங்கவீனர்களாகத்தான் இருக்கிறோம். போருக்குப் பிறகு எங்களது உரிமைகள் பற்றி உரத்துப் பேசுவதற்கு நாம் தயாராக இல்லை. அவ்வாறு பேசினால், அரசு கோபித்துக் கொள்ளுமோ, சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவார்களோ என்று மௌனிகளாக இருக்கிறோம்.

அடுத்த தேர்தலுக்கு ஆசனம் தராமல் விட்டு விடுவார்களோ என்ற பயத்தில் ஆக்கபூர்வமான விமர்சனங்களைக் கூட கட்சித் தலைமைகளிடம் நாம் சொல்லுவதற்குத் தயங்குகின்றோம். இதுதான் விடுதலை அரசியலுக்குப் பின்னரான இன்றைய தேர்தல் அரசியலின் யதார்த்தம்.- என்றார். (ஐ)

## மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிய பொது அமைப்பு

பருத்தித்துறை, டிசெ.06


பருத்தித்துறை வேலும் மயிலும் பவுண்டேசன் நிறுவனத்தால் பெற்றோரை இழந்த பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.

இப் பாடசாலையிலுள்ள 46 மாணவர்கள் பாதணிகளைப் பெற்றார்கள். இந் நிகழ்வில் வேலும் மயிலும் பவுண்டேசன் நிறுவன முகாமையாளர் ரி.சிவகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினார். (இ-31)

## பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம்

பருத்தித்துறை தலைமைப் பீட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நுவான். பி. டந்த நாராயணா கொழும்பு போசோர் பொலிஸ் நிலையத்துக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

கடந்த 2 வருடங்களாகப் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய நுவான், பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய கொழும்பு மாவட்டம் போசோர் பொலிஸ் நிலையத்துக்கு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-9-40)



தியாகி அறக்கொடை நிலையத்தின் நிறுவுநர் சமூகஜோதி தியாகேந்திரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. வைத்தியசாலைக்கு மருந்து காவு வண்டி 05 , நோயாளர் காவு வண்டி உட்பட 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரனிடம் இந்தப் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டன. (ஐ)

## ரூபா 36 லட்சம் செலவில் 6 பாலங்கள் வடமராட்சி கிழக்கில் நிர்மாணம்


வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் 36 லட்சம் ரூபா செலவில் 6 பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள மருதங்கேணி, உடுத்துறை, குடத்தனை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள வீதிகளில் இப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் தலா2 பாலங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இயற்கை அனர்த்தத்தின் போது இலகுவில் பாதிக்கப்படக்கூடிய இப் பிரதேசத்தில் அனர்த்த தணிப்பு நடவடிக்கைக்காக இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (இ-31)

# ஜெயலலிதா விவகாரம்?

## தமிழகத்தில் பதற்றம்; மக்கள் கொந்தளிப்பு!







சென்னை, டிசெ.06

முதல்வர் ஜெயலலிதாவின் உடல் நிலை தொடர்பாகவும் அவருக்குத் திடீரென நேற்று முன் தினம் ஏற்பட்ட மாரடைப்பு தொடர்பாகவும் பல் வேறு கோணங்களில் நேற்றுக் காலை முதல் செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

இதனால் தமிழகம் முழுவதும் பெரும் பரப ரப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளன. அப்பலோ மருத்துவமனைச் சூழலில் பொலிஸ் பாதுகாப்புத் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

எப்போதும் மூன்றடுக்குப் பாதுகாப்பில் இருக்கும் அப்பலோ மருத்துவமனையின் பின் வாசலுக்கு நேற்று முன்தினம் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸார் மட்டுமில்லாமல், அதிரடிப் படையினர் சென்னை முழுவதும் குவிக்கப்பட்டனர்.

மருத்துவமனையை நோக்கி அ.தி.மு.க. தொண்டர்கள் குவிந்திருந்த நிலையில் பதற்றம் நிலவியது.

இதேவேளை, லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் பீலேயின் ஆலோசனையின் படி நேற்று திங்கட் கிழமை அதிகாலை 3 மணிக்குப் பின்னர் முதல்வருக்கு இதயநாளத்தில் சிறு அளவிலான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்று அப்பலோ வைத்தியசாலை செய்தி வெளியிட்டு இருந்தது.

*அதிர்ச்சியில் மரணம்*

இதேவேளை பண்ருட்டி அருகே அ.தி.மு.க. பேரவைச் செயலாளர் திடீரென ஏற்பட்ட மாரடைப் பால் மரணம் அடைந்துள்ளார். இது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடலூர் மாவட்டம் பண்ருட்டியை அடுத்த சன்னியாசிப் பேட்டையைச் சேர்ந்தவர் நீலகண்டன் (வயது40) நேற்றுமுன்தினம் மாலை முதல்வர் ஜெயலலிதா உடல்நலம் தொடர்பான செய்தியை தொலைகாட்சியில் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றனர். ஆனால், மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயை நீலகண்டன் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நீலகண்டன் ஜெயலலிதா பேரவைச் செயலாளராக இருந்துள்ளார்.

*தமிழக - கேரள எல்லையில் பாதுகாப்பு அதிகரிப்பு*

தமிழகத்தை ஒட்டிய கேரள எல்லைப் பகுதிகளான திருவனந்தபுரம், கொல்லம், இடுக்கி, பாலக்காடு மாவட்டங்களில் அந்த மாநில பொலிஸார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். தமிழக முதல் வர் ஜெயலலிதா மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் கண்காணிப்பில் உள்ளமையையடுத்துப் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

இதேபோல், சபரி மலை கோயிலில் சில இடங்களில் பொலிஸார் தடுப்பு வேலிகளை அமைத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, கடைகளைத் திறக்க வேண்டாம் என்று வணிகர் சங்கங்களுக்கு, பொலிஸார் வாய் மொழி உத்தரவு பிறப்பித்தனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் கடைகள் மூடப்பட்டன.

நேற்று முன்தினம் இரவே, சென்னையில் பெரும்பாலான பெற்றோல் நிலையங்கள் மூடப்பட்டன.

*அப்பலோ மருத்துவமனை முன்பாக திரண்ட அ.தி.மு.க.தொண்டர்கள்*

தகவல் அறிந்த அ.தி.மு.க. தொண்டர்கள், சென்னை அப்பலோ மருத்துவமனை முன்பு குவிந்துள்ளனர். மேலும் ஜெயலலிதா நலம்பெற வேண்டி பிரார்த்தனையிலும் ஈடுபட்டுள்ளனர்.

*முக்கிய தலைவர்கள் பிரார்த்தனை*

முதலமைச்சர் ஜெயலலிதா நலம் பெற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, மத்திய அமைச்சர் வெங்கைய்யா நாயுடு உள்ளிட்ட தலைவர்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

## விடுதலைச் சிறுத்தைகளின் அரசியல் மாநாடு பிற்போடல்

சென்னை, டிசெ.06

புயல், மழை போன்ற வானிலை எச்சரிக்கை மற்றும் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகள் என்பவற்றால் புதுச்சேரியில் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்ட அரசியல் மாநாடு பிற்போடப்பட்டுள்ளது என திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கூறியவை வருமாறு:-

''பிரதமர் நரேந்திர மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் இந்திய பொருளாதாரம் நிலை குலைந்து இருக்கிறது. இதனால் ஏழை, எளியவர்கள் ஒரு மாதமாகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

பிரதமரின் இந்த அறிவிப்பு, பொருளாதார நெருக்கடி நிலையாக மாறியுள்ளது. அது மட்டுமன்றி இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு இது நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்கும் வகையில் புதுச்சேரியில் அம்பேத்கர் நினைவு நாளான இன்று மாநாடு நடத்துவது என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் புயல், மழை போன்ற வானிலை எச்சரிக்கைகளாலும் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகளாலும் புதுச்சேரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட அரசியல் சட்ட பாதுகாப்பு மாநாட்டை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், இன்று அம்பேத்கரின் 60 ஆம் ஆண்டு நினைவு நாளாகும். எனவே விடுதலைச் சிறுத்தைகள் தமிழகம் முழுவதும் ஆங்காங்கே அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அக வணக்கம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.''-என்றார்.(எ)

## சபரிமலை அருகே வெடிமருந்துகள் மீட்பு

திருவனந்தபுரம், டிசெ.06

சபரிமலைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 360 கிலோகிராம் எடையுடைய வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவாமி ஐய்யப்பன் கோயில் அருகே உள்ள சபரி பீடத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் 12 பிளாஸ்டிக் பீப்பாய்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபரிமலை சுவாமி ஐய்யப்பன் கோயிலில் தற்போது மண்டல பூஜை இடம்பெற்று வருகின்ற நிலையில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களும் காணப்படும் அதேவேளை இன்று பாபர்மசூதி இடிப்பு தினம் என்பதாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (எ)

## மேலும் இரு அணு உலைகள் கூடங்குளத்தில் அமைக்கப்படும்

### இந்தியா—ரஷ்யா மாத இறுதியில் ஒப்பந்தம்

டில்லி, டிசெ.06

கூடங்குளத்தில்மேலும் 2 அணு உலைகளை அமைக்க இந்தியா - ரஷ்யா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது. அதற்கான பொது அடிப்படைத் திட்ட ஒப்பந்தம் இம்மாத இறுதியில் கையெழுத்தாகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளத்தில் ரஷ்யா உதவியுடன் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஒப்பந்தத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் சோவியத் ரஷ்யாவின் ஜனாதிபதியாக இருந்த கோர்பச்சேவ் ஆகியோர் 1988 ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர்.

ஆனால் அணுமின் நிலையத்துக்கான கட்டுமானப் பணி 1997 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.

தற்போது கூடங்குளத்தில் ரூ.20 ஆயிரத்து 962 கோடி செலவில் முதலாவது மற்றும் 2 ஆவது அணு உலைகள் கட்டப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. முதலாவது உலை 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் உற்பத்தியை ஆரம்பித்தது. 2 ஆவது உலை கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கிரிடில் இணைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே 3ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைக் கட்டுமாணப் பணி 2022- 2023 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இந்தநிலையில் கூடங்குளத்தில் மேலும் 2 அணு உலைகள், அதாவது 5 மற்றும் 6 ஆவது உலைகள் அமைக்கப்பட உள்ளன.

அதற்கான பொது அடிப்படைத் திட்ட ஒப்பந்தம் இம்மாத இறுதியில் கையெழுத்தாகிறது. அதில் பிரதமர் நரேந்திர மோடியும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் கையெழுத்திடுகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் சமீபத்தில் இந்தியா சென்றிருந்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே இந்த ஆண்டு இறுதியில் இதற்கான பொது அடிப்படைத்திட்ட ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக அறிவித்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஹிட்லருக்குப் பயந்து ஒளித்து வைத்த கார்கள்!

### பிரான்ஸில் கண்டுபிடிப்பு



பரிஸ், டிசெ.06

இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனியின் சர்வதிகாரி அடல்ப் ஹிட்லருக்குப் பயந்து பிரான்ஸ் மக்கள் ஒளித்து வைத்திருந்த பழைமையான கார்கள் தற்போது கிடைத்துள்ளன.

பிரான்ஸ் நாட்டுக்குள் இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர் தலைமையிலான நாஜிப் படைகள் நுழைந்த போது அங்குவாழ்ந்த செல்வந்தர்கள் தங்களுடைய கார்கள் நாஜிக்களின் பார்வையில் சிக்கினால் அவற்றைப் பறிமுதல் செய்து விடுவார்கள் என்று அஞ்சினர்.

நாஜிக்களின் கையில் சிக்காமல் இருப்பதற்காக தங்களது விலையுயர்ந்த கார்களை மத்திய பிரான்ஸில் உள்ள ஒரு கல்குவாரியின் சுரங்கத்துக்குள் நிறுத்தி வைத்திருந்தனர். போரின்போது அவர்களில் பெரும்பாலானோர் பலியாகி இருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் சுமார் 70 ஆண்டுகளின் பின்னர் அந்தக் கார் புதையலை பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒரு புகைப்படக்காரர் கண்டுபிடித்துள்ளார். (எ)

# பாக். விடுதியில் தீ; 11 பேர் கருகிப் பலி!

கராச்சி, டிசெ.06

பாகிஸ்தானில் நட்சத்திர விடுதி ஒன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்; 30 பேர் காயம் அடைந்தனர்.

கராச்சியில் ஷகாரா-இ-பைசல் என்ற 4 நட்சத்திர விடுதி உள்ளது. அங்கு நேற்றுக் காலை தரைத்தளத்தில் உள்ள சமையலறையில் திடீரெனத் தீப்பிடித்தது. அந்த தீ விடுதியின் 6 மாடிகளிலும் விரைவாகப் பரவியது.

தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை



அணைத்தனர். மேலும் அங்கு தங்கியிருந்த 100 இற்கும் மேற்பட்டோரைப் பத்திரமாக வெளியேற்றினர். எனினும் இந்தத் தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்; 30 பேர் காயம் அடைந்தனர்.

அவர்கள் 6 பேர் ஆண்கள், 4 பேர் பெண்கள். மற்றும் ஒரு குழந்தையும் அடங்கும். தீ விபத்தில் 3 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தீ விபத்து இடம் பெற்ற போது அந்த விடுதியில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தங்கியிருந்தனர். யாஷின் முர்தஷா 2 ஆவது மாடியில் இருந்து குதித்து உயிர் தப்பினார். இதனால் அவரது கணுக்கால் மூட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டது. கண்ணாடியை உடைத்து வெளியேறியதால் கராமத் அலிக்கு காயம் ஏற்பட்டது. சோகிப் மகுத் காயமின்றித் தப்பினார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## இந்தோனேசியாவில் நேற்று நில நடுக்கம்

ஜகார்த்தா, டிசெ.06

இந்தோனேசியாவின் மையப்பகுதியில் நேற்றுக் காலை ரிச்டர் அளவுகோலில் 6.4 அளவில் வலிமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் இதன் மூலம் சுனாமி ஆபத்து இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிழக்கு நுசா டெங்காரா பகுதியில், நேற்றுக் காலை 8.13 மணி அளவில் வலிமையான நில நடுக்கம் ஏற்பட்டது. அங்கிருந்து 120 கி.மீ. வடகிழக்கே உள்ள பிலாஸ் திமிர் பகுதியை மையமாகக் கொண்டிருந்த இந்த நில நடுக்கம் கடல் மட்டத்திலிருந்து 524 அடி ஆழத்தில் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




பிரிட்டனிலுள்ள பெட்போர்ட் என்ற இடத்தில் உள்ள யார்ல் வூட் தடுப்பு முகாமை மூடவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் யார்ல் வூட் தடுப்பு முகாமைச் சூழ்ந்து மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ரஷ்யாவில் பஸ் விபத்து: குழந்தைகள் 11 பேர் பலி!

மொஸ்கோ, டிசெ.06

ரஷ்யாவில் இடம் பெற்ற மிக மோசமான பஸ் விபத்தில் 11 குழந்தைகள் உட்பட 12 பேர் பலியாகினர். 12 - 14 வயதுக்கு உட்பட்ட 29 குழந்தைகள் மற்றும் 3 பெரியவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்த பஸ் டிரக்குடன் மோதிய விபத்தில் பஸ்ஸில் இருந்த 12 பேர் பலியாகினர்.

போட்டி ஒன்றில் கலந்து கொண்டு, பாடசாலைச் சிறார்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து நேரிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் பலியான குழந்தைகளின் குடும்பத்தாருக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். (எ)

# இத்தாலி, நியூஸிலாந்து பிரதமர்கள் ராஜினாமா?

## வெவ்வேறு காரணங்களுக்காக



ரோம், டிசெ.06

இத்தாலியின் தற்போதைய அரசமைப்பில் மேம்பாடுகளைக் கொண்டுவரும் நோக்கில் செய்யப்படும் மாற்றங்கள் தொடர்பான திட்டம் குறித்து நடைபெற்ற மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு பெரும் தோல்வியடைந்ததால், இத்தாலியின் பிரதமர் மேட்டியோ ரென்சி பதவி விலகியுள்ளார்.

இதேவேளை, நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீயும் தனது பதவியை ராஜினாமாச் செய்யப்போகிறார் என அறிவித்துள்ளார்.

நடைபெற்ற கருத்தறியும் வாக்கெடுப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள அரசமைப்பு மேம்பாட்டுக்கு ஆதரவாக எந்தத் வாக்கும் பதிவாகவில்லை.

எந்தத் தரப்பு மிகப் பெரிய வித்தியாசத்தில் வெற்றி பெறும் என்று கருத்துக் கணிப்புகள் முன்னதாகத் தெரிவித்தன.

இத்தாலிப் பிரதமர் மேட்டியோ ரென்சி பரிந்துரைத்த மாற்றங்கள் மத்திய அரசை வலுப்படுத்தி, செனட் நாடாளுமன்ற மேலவையை பலவீனப்படுத்தும்.

ஆனால், ரென்சியின் சொந்தக் கட்சியிலுள்ள சிலர் உட்படப் பலர், இந்த மாற்றங்கள் பிரதமருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை வழங்கும் என்று வாதிட்டுள்ளனர்.

இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பு முடிவுகள், ஆட்சிக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்து வந்த பைவ் ஸ்டார் அமைப்புத் தலைமையிலான எதிர்க்கட்சிகளுக்குப் பெரும் வெற்றி என்று கூறப்படுகின்றது.

இதேவேளை நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீயும் தமது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தனது குடும்பத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்க தாம் இந்த முடிவை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## வியட்நாமில் கடும் மழை இதுவரை 13 பேர் உயிரிழப்பு!



வியட்நாமில் பெய்து வரும் கடும் மழை காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்தமாத இறுதி தொடக்கம் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பலரும் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ள நிவாரணப் பணிகளை பல நாடுகளிடம் இருந்து எதிர்பார்த்துள்ளதாகவும் மீட்புப் பணிகளில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால் வியட்நாமின் பெரிய பிரதேசங்கள் நீரில் மூழ்க வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)





காரைநகர் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற, சர்வதேச முதியோர் விசேட தேவையுடையோர் தின விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சிரேஷ்ட கிராம சேவையாளர். இ.திருப்புகழூர்சிங்கம் ஆகியோர் முதியவர்களைக் கௌரவிப்பதையும், கௌரவிக்கப்பட்ட முதியவர்களுடன் பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (ஐ)

# வீதிப் போக்குவரத்தை அவதானித்து பாதுகாப்பு வழங்குவதே எமது நோக்கம்

## போக்குவரத்து விதிமுறை விழிப்புணர்வு நிகழ்வில் எஸ்.எஸ்.பி

தெல்லிப்பழை,டிசெ.06

வீதிப்போக்குவரத்தில் முன்னேற்றம் காண்பதும் பாதுகாப்பு வழங்குவதுமே எமது நோக்கம். தற்போது வீதிகள் எல்லாம் 'காப்பெற்'றாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றன.

சாரதிகளுக்கும், பாதசாரிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஆர்.றஞ்ஜித்மாரசிங்க.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்துக்கு உட்பட்ட நெல்லியடி, தெல்லிப்பழை, இளவாலை, பலாலி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் உள்ள போக்குவரத்து பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸார் இணைந்து போக்குவரத்து விதிமுறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்திட்டம் ஒன்றைப் புத்தூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் மேற்கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அச்சுவேலி பொலிஸ் பிரதேசத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற பாரதூரமான வீதி விபத்துக்களை விட இவ்வருடம் 98 வீதம் விபத்துக்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அதே போல் நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் அதிக வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

ஏனைய பொலிஸ் பிரதேசங்களில் கடந்த வருடத்தை விட இவ்வருடம் விபத்துக்கள் 80 வீதம் குறைக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அதிக விபத்துக்கள் இடம் பெறுவதற்குக் காரணம் மது போதையில் வாகனம் செலுத்துதலும், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் ஓடுவதுமே.

அடுத்த வருடத்தில் இருந்து போக்குவரத்து விதிமுறையை மீறும் வாகன சாரதிகளுக்கு அதிகளவான தண்டங்களை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, பருத்தித்துறை தனியார் பேருந்துகள் போட்டி போட்டு ஓடுவதால் பாரதூரமான விபத்துக்கள் இடம் பெறும் நிலை ஏற்படுகிறது. பாதசாரிகளும் உயிரிழக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன.

அத்துடன் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் பேருந்துத் தரிப்பிடத்தில் நிற்காமல் வேறு இடங்களில் நிறுத்திப் பயணிகளை ஏற்றி இறக்குகின்றன என்று பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இரு போக்குவரத்துச் சங்கங்களின் தலைவர்களும் இணைந்து இவ் விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பொலிஸார் சட்டத்தைக் கையில் எடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.- என்றார்.

இந்நிகழ்வில் வாகன சாரதிகள், பாடசாலை மாணவர்கள், பிரதேசசபை ஊழியர்கள்,சமூக அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## அரச சாராயத்தை வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

குடத்தனை, டிசெ.06

பருத்தித்துறை பொலிஸாரால் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 119 அரச சாராயப் போத்தலுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிறுக்கிழமை மாலை பருத்தித்துறை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மணற்காடு பகுதிக்குச் சென்று சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட பொதி ஒன்றைச் சோதனையிட்டபோது 180 மில்லி லீற்றர் அளவு கொண்ட 119 சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டன.

அதனை எடுத்துச் சென்ற அப் பகுதியைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ஐ-40)


## அவிசாவளையில் 86 ஊழியர்களுக்கு திடீர் சுகவீனம்!

அவிசாவளைப் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 86 ஊழியர்களுக்குத் திடீரென உடல்நலக் கோளாறு ஏற்பட்டுள்ளது. மயக்கம் மற்றும் வாந்தி காரணமாகக் குறித்த ஊழியர்கள் நேற்றுக் காலை பெரும் சிரமப்பட்டுள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உணவு நஞ்சானதன் காரணமாகவே இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களை இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டைக் கிளையினர் கௌரவித்தனர். கடந்த சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பின்போது பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்களுடன் வங்கி முகாமையாளர் இணைந்து எடுக்கப்பட்ட படம். (ஐ-58)



எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நெல்லியடிப் பொலிஸாரால் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. 'குருதிப் பரிசோதனை நாளை அல்ல இன்றே சிகிச்சை உண்டு' என்ற துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது.

## காலம் தாழ்த்திக் கிடைக்கும் அழைப்பிதழ் கடிதங்கள்

### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் கலைஞர்கள்

வவுனியா மாவட்ட செயலகத்தால் நிகழ்வுகளுக்கு அனுப்பும் கடிதங்கள் நிகழ்வுகள் முடிந்த பின்னரே கிடைக்கின்றன என்று கலைஞர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டச் செயலகத்தில் மாவ்ட்ட மரவுரிமைச் சின்னங்களைக் காட்சிப்படுத்தி, மரபுசார் குழுவை அறிமுகம் செய்யும் நோக்குடன் ஆவணக் காப்பகம் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. இதற்குரிய அழைப்பிதழ்கள் நிகழ்வு முடிந்த மறுநாள் மதியமே கலைஞர்கள் பலருக்கும் கிடைத்துள்ளன.

இதேபோன்று மாவட்ட செயலக ஏற்பாட்டில் நடைபெறும் கலாசார நிகழ்வுகள், கலைஞர்கள்களுக்கான கூட்டங்கள் தொடர்பான கடிதங்களும் இவ்வாறே தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

இதனால் தாமும் நிகழ்வுகளில் பங்கு பற்ற முடியாதுள்ளதாகக் கலைஞர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடிதங்கள் நிகழ்வுகள் முடிந்த பின் கிடைப்பதற்குத் தபால் திணைக்கள உத்தியோகத்தர்களா, அல்லது மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களா காரணம் என்பதைக் கண்டு பிடித்து இனி வரும் காலங்களில் என்றாலும் இவ்வாறான தவறுகள் நடைபெறாது இருக்க மாவட்ட அரச அதிபரோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ-100)

# மன்னார் எவர்கிறீனை வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தது முனை சென்.தோமஸ் கபடி அணி



மன்னார், டிசெ.06

மன்னார் எவர் கிறீன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய மாபெரும் கபடிப் சுற்றுப் போட்டியில் பருத்தித் துறை முனை - சென். தோமஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 03 , 04 திகதிகளில் மன்னார் பொது விளையாட்டரங்கில் போட்டி நடை பெற்றது. இப்போட்டியில் மன்னார், வவுனியா கிளிநொச்சி, முல்லை தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இருந்து 15 கழகங்கள் பங்குபற்றின.

அரை இறுதிக்குள் நுழையும் அணியைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய போட்டி கடந்த 03 ஆம் திகதி இடம்பெற்றது. பருத்தித்துறை முனை சென். தோமஸ் 'ஏ' அணியும் மன்னார் எவர் கிறீன் அணியும் இந்தப் போட்டியில் சந்தித்தன.

பார்வையாளர்களின் ஆதரவுகளுடன் களமிறங்கிய மன்னார் எவர் கிறீனின் ஆதிக்கம் மேலோங்க முதற்பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்றது. மன்னார் அணியின் வேகத்தினுள் சற்று தடுமாறிய தோமஸ் அணிக்கு பார்வையாளர்களின் ஆதரவுகள் பெருமளவாக கிடைக்கவில்லை.

இதனால், மன்னார் எவர் கிறீன் அணியின் ஆதிக்கத்துடன் முதற்பாதிஆட்டம் 17:11 என்ற புள்ளிகளுடன் முடிவுக்குவந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் முனை சென். தோமஸ் 'ஏ' அணி தங்கள் விளையாட்டு வியூகங்களை மாற்றி அமைத்து முழுமூச்சுடன் களத்தில் கால்பதித்தது.

முனை சென். தோமஸ் 'ஏ' அணி முன்னிலை பெறத் தொடங்கியது. முதல் பாதி ஆட்டத்தில் 11 புள்ளிகளுடன் இருந்த முனை சென். தோமஸ் 'ஏ' அணி 42 புள்ளிகளை மிக விரைவாகப் பெற்று இரண்டாம் பாதி ஆட்டத்தை தனது முழுக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தது.

நிலைகுலைந்த நின்ற எவர் கிறீன் அணியை தூக்கி நிறுத்த பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அனைத்தும் முறியடிக்கப் பட்டுக்கொண்டே இருந்தன.

இறுதியாக போட்டி முடிவுக்குவரும் போது சென். தோமஸ் 'ஏ' அணி 42:32 என்றபுள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது.

## வடக்கின் சுப்பர் கிங்-2016:

# கும்பிளான் குறிஞ்சிக் குமரனை வீழ்த்தியது ஊரெழு றோயல்



யாழ்ப்பாணம், டிசெ.06

மயிலங்காடு ஞான முருகன் விளையாட் டுக் கழகம் 'வடக்கின் சுப்பர் கிங்-2016' உதை பந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் முதலாவது போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

இப்போட்டியில் 2-1 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதற்பாதியில் குறிஞ்சிக்குமரன் அணி 0-1 என முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியில் தனது வேகமான ஆட்டத்தை வெளிப் படுத்திய றோயல் அணி, இரு கோல்களை போட்டது. இறுதியில் றோயல் அணி 2-1 என்ற கால்க்கணக்கில் வெற்றி பெற்று தனது காலிறுதி வாய்ப்பை தக்கவைத்துள்ளது.

லீக் சுற்றுக்கான தெரிவுப் போட்டியில் கொக்குவில் பொற்பதி அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் அணி மோதியது .

இப்போட்டியில் 7-0 என்ற கோல் கணக்கில் பொற்பதி அணியை வீழ்த்தி லீக் சுற்றுக்குள் குருநகர் பாடும்மீன் அணி நுழைந்துள்ளது.

இன்று செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற உள்ள போட்டியில், திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி விளையாடவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ள மற்றுமொரு போட்டியில், குருநகர் பாடும்மீன் அணியை நாவற்குழி அன்னை அணி எதிர்த்தாடவுள்ளது.(க -08)



### ஒருநாள் போட்டியில் டோனி பங்கேற்க முடியாது!



டில்லி, டிசெ.06

இந்தியாவின் அணித் தலைவர் டோனி, இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்க முடியாது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி, இந்தியாவிற்கு எதிராக 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 இருபதுக்கு இருபது போட்டித் தொடரில் விளையாடவுள்ளது.


இரு அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி புனே மைதானத்தில் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய அணித்தலைவர் டோனி கடைசியாக கடந்த ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பங்கேற்றார்.

அதன்பின் எந்த போட்டியிலும் பங்கேற்கவில்லை. இதனால், பி.சி.சி.ஐ.யின் விதிகளின்படி இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்க முடியாது என புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது.

# ‘லா லிகா’ உதைபந்தாட்டத் தொடர்:

# ரியல் மட்ரிட் அணி முதலிடம்



மட்ரிட், டிசெ.06

‘லா லிகா’ உதைபந்தாட்டத் தொடரில் ரியல் மட்ரிட் அணி முதலிடத்தில் நீடிக்கிறது.

பார்சிலோனா அணிக்கு எதிரான நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியை 1-1 என சமன் செய்த ரியல் மட்ரிட் அணி, தொடர்ச்சியாக 33 போட்டிகளில் தோல்வியைச் சந்திக்காமல் வலம் வருகிறது.

ஸ்பெயினில், உள்ளூர் உதைபந்தாட்ட கழக அணிகள் பங்கேற்கும் ‘லா லிகா’ தொடர் இடம்பெற்று வருகிறது.

இதில் 20 அணிகள் பங்கேற்கின்றன. ‘ரவுண்ட்-ராபின்’ முறையிலான இந்தப் போட்டிகளின் முடிவில், புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிக்கும் அணி கோப்பை வெல்லும்.

பார்சிலோனாவில் இடம்பெற்ற போட்டியில் மெஸ்சி, நெய்மர் இடம் பெற்றுள்ள பார்சிலோனா அணி, கிறிஸ்டியானோ ரொனால்டோ, பென்சிமா இடம் பெற்றுள்ள ரியல் மட்ரிட் அணியை சந்தித்தது. முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பார்சிலோனா அணிக்கு 53 ஆவது நிமிடத்தில் கிடைத்த ‘பிரீகிக்’ வாய்ப்பில் நெய்மர் தூக்கி அடித்த பந்தை லூயிஸ் சாரஸ் தலையால் முட்டி கோல் அடித்தார்.

தொடர்ந்து போராடிய ரியல் மட்ரிட் அணிக்கு 90 ஆவது நிமிடத்தில் லூகா மாட்ரிக் ‘பாஸ்’ செய்த பந்தை ரமோஸ் கார்சியா தலையால் முட்டி ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். ஆட்டநேர முடிவில் போட்டி 1-1 என சமநிலையானது. இதன் மூலம் ரியல் மாட்ரிட் அணி தொடர்ச்சியாக 33 போட்டிகளில் தோல்வியை சந்திக்காமல் உள்ளது.

மற்றொரு போட்டியில் செவில்லா அணி 1-2 என்ற கோல் கணக்கில் கிரனடா அணியிடம் தோல்வி அடைந்தது. அத்லெடிகோ மட்ரிட், எஸ்பன்யால் அணிகள் மோதிய மற்றொரு போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது.

இதுவரை விளையாடிய 14 போட்டிகளில் 10 வெற்றி, 4 சமநிலை என 34 புள்ளிகளுடன் ரியல் மட்ரிட் அணி முதலிடத்தில் நீடிக்கிறது. அடுத்த மூன்று இடங்களில் பார்சிலோனா (28 புள்ளி), செவில்லா (27), அத்லெடிகோ மட்ரிட் (25 புள்ளி) அணிகள் உள்ளன.

# 20 வயதுக்கு உட்பட்ட பீபா மகளிர் உதைபந்தாட்டம்;

# வட கொரியா உலக சம்பியன் பட்டத்தை வென்றது



பப்புவா, டிசெ.06

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பீபா உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் வட கொரிய மகளிர் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

பிரான்ஸ் இரண்டாம் இடத்தையும் ஜப்பான் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

பப்புவா நியூகினியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரான்ஸை எதிர்த்தாடி வட கொரியா 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது.

20 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் 10 வருடங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக வட கொரியா சம்பியனாகியுள்ளது.

இவ் வருட இறுதிப் போட்டியின் 17ஆவது நிமிடத்தில் கிரேஸ் கியோரோ கோல் ஒன்றைப் போட்டு பிரான்ஸ் அணியை முன்னிலைப்படுத்தினர் . போட்டியின் ஆரம்பத்திலேயே பிரான்ஸ் கோல் போட்டதால் அவ்வணி சம்பியனாகலாம் என்ற எதிர்பார்ப்பு அரங்கில் அதிகரிக்கத் தொடங்கியது.

ஆனால் அடுத்த 13ஆவது நிமிடத்தில் வட கொரியா சார்பாக ஜொங் சிம் வீ கோல் நிலையை சமப்படுத்த போட்டியில் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

இடைவேளையின் பின்னர் சிறந்த வியூகங்களை அமைத்து வேகத்துடனும் விறுவிறுப்புடனும் விளையாடிய வட கொரியா பியொங் ஹுவா கிம் 55ஆவது நிமிடத்தில் போட்ட கோல் மூலம் முன்னிலை அடைந்தது.

போட்டியின் 87ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற பெனால்டியை வட கொரிய வீராங்கனை சோ யொன் ஜொன் இலக்குத் தவறாமல் கோலினுள் புகுத்தி தனது அணி சம்பியனாவதை மேலும் உறுதிசெய்தார்.

இப் போட்டிக்கு முன்பதாக நடைபெற்ற மூன்றாம் இடத்தைத் தீர்மானிக்கும் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை 1 - 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி கொண்ட ஜப்பான் வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக்கொண்டது.

இவ் வருடப் போட்டிகளில் ஒரு விசேடம் என்னவென்றால் பிரதான கிண்ணம் உட்பட வழங்கப்பட்ட விசேட பரிசுகளில் இரண்டைத் தவிர மற்றைய அனைத்தையும் இரண்டு ஆசிய நாடுகள் பெற்றதன் மூலம் தங்களது ஆதிக்கத்தை வெளிப்படுத்தின.

அதி சிறந்த வீராங்கனைக்கான தங்கப் பந்து: சுகிட்டா ஹினா (ஜப்பான்).

அதிக கோல்கள் (5) போட்ட வீராங்கனைக்கான தங்கப் பாதணி: மாமி யூனோ (வட கொரியா)

அதி சிறந்த கோல்காப்பாளினிக்கான தங்க கையுறை: மிலேனி சவாஸ் (பிரான்ஸ்).

நேர்த்தியான விளையாட்டுக்குரிய விருது: ஜப்பான்.



## மன்னார் விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணம்

யாழ்ப்பாணம் டிசெ.06

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது கார் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மன்னார் வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த மோகன் சுபாஸ்கரன் (வயது-29) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் மன்னார் வெள்ளாங்குளம் பிரதான வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த போது வேகமாக வந்த கார் ஒன்று மோதியதாகக் கூறப்படுகின்றது. இதனால் தலையில் படுகாயமடைந்த அவர் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். அங்கு வழங்கப்பட்ட சிகிச்சையும் பயனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற் கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-09)

## பிறந்து 2 மாதங்களேயான குழந்தை வயிற்றுவலியால் அவதிப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம் டிசெ.06

பிறந்து இரண்டு மாதங்களேயான குழந்தையொன்று வயிற்றுவலியினால் அவதியுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளது.

சுழிபுரம் – தொல்புரம் மேற்கைச் சேர்ந்த றஜீவன் அஸ்மிதா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

சிறுகுடல்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருந்ததால் ஏற்பட்ட அடைப்பே குழந்தை உயிரிழக்கக் காரணம் என உடற்கூற்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை தாய்ப்பால் குடித்த பின்னர் குழந்தை தொடர்ச்சியாக அவதிப்பட்டவாறு அழுதது. உடனடியாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. எனினும் குழந்தை வழியிலேயே உயிரிழந்துவிட்டது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்ட விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-09)

## ஜனாதிபதி, பிரதமரை சாட்சியமளிக்க வருமாறு நீதிமன்றம் அழைப்பு

*திஸ்ஸ அத்தநாயக்காவுக்கு எதிரான வழக்கில்*

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

போலிஆவணங்கள்தயாரித்த குற்றச்சாட்டு தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்காவுக்கு எதிரான வழக்கில் சாட்சியளிப்பதற்கே இவர்கள் எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதி நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், முறைப்பாட்டின் சாட்சியாளர்கள் 13 பேரையும் அதே தினத்தில் நீதிமன்றில் ஆஜராகுமாறு மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன உத்தரவிட்டுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்காவின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் போலி ஒப்பத்துடன் அவர்கள் சென்று கொண்ட ஒப்பந்தம் என்ற பெயரில் ஒரு தவறான ஆவணத்தை வெளியிட்டனர் என திஸ்ஸ அத்தநாயக்க மீது இவ் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம், இன்று நடைபெறும் சபையின் கூட்டத்தில் அறிவிப்பார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினரான வை.தவநாதனுக்கு வழங்கப்பட வேண்டும் என பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எழுத்துமூலம் மாகாண அவைத் தலைவரை கேட்டமையை அடுத்தே சர்ச்சை எழுந்துள்ளது.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான தவராசாவுக்கும் ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையே ஏற்பட்ட முறுகலே இந்த நிலைமைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது

எதிக்கட்சித் தலைவர் பதவியை தவநாதனுக்கு வழங்கும்படி கோரும் கடிதம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரிடமிருந்து தமக்குக் கிடைத்தமையை அடுத்து, அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எண்மரையும் தனித்தனியாக அழைத்து சந்திப்பு நடத்தினார்.

இந்த இருவரில் யாரின் பக்கம் அவர்களின் ஆதரவு என்பதை 'சீல்' இடப்பட்ட உறையில் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்று தெரிவிக்கின்றது எதிர்க்கட்சி உறுப்பினர் எண்மரில் அதிகமானோரின் தெரிவின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவைத் தலைவர் தீர்மானிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது


எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எண்மரில் ஒருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து அந்தக் கட்சி பட்டியலில் தெரிவாகியவர்.

ஏனைய ஏழு பேரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்களில் இருவர் ஈ.பி.டி பி.யினர். ஒருவர் தவராசா. மற்றவர் தவநாதன். எஞ்சிய ஐவரில் மூவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள். மற்றைய இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் மைத்திரி அணியிலும் மற்றவர் மஹிந்த அணியிலும் உள்ளனர்.

இந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுள் அனேகமானவரின் ஆதரவு தவராசா பக்கமே இருக்கின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ)

## புகையிலைக் கம்பனிகள் வழங்கும் ஒரு சதத்தையும் அரசு வாங்காது

*ஜனாதிபதி மைத்திரி உறுதி*



கொழும்பு டிசெ.06

புகையிலை கம்பனிகள் வழங்கும் ஒரு சதத்தையேனும் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சின் செலவுகள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்–

பௌதீக ரீதியாக எவ்வளவு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிப்பது நாட்டு மக்களின் சிறந்த சுகாதார நிலைமையாகும். இலங்கை மக்களை ஆரோக்கியமான சமூகமாகக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம்.

இலங்கை அரசாங்கம் புகையிலை மற்றும் மதுசாரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பின்பற்றும் இறுக்கமான நடைமுறைகள் இன்று ஐக்கிய நாடுகள் சபை, உலக சுகாதார தாபனம் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றது. – என்றார். (ம)

## மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று கிளி.வைத்தியசாலைக்கு விஜயம்

*ஏழரைக் கோடி ரூபா பெறுமதிமான மருத்துவ உபகரணங்கள் வழங்கல்*

கிளிநொச்சி டிசெ.06

மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மகிபால நேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து, மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஏழரை கோடி ரூபா பெறுமதியிலான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

அத்தோடு தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்று வருகின்ற புனரமைப்பு பணிகளையும் அவர் பார்வையிட்டார். அடுத்த ஆண்டும், மேலதிக புனரமைப்புக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படுமாயின் நிதி ஒதுக்கீட்டுக்கான பரிந்துரை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் வாக்குறுதியளித்தார்.

வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுகளைப் பார்வையிட்ட அவர், அங்கு வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் மேலதிக தேவைகள் குறித்து வைத்திய நிபுணர்கள் மற்றும் ஆளணியினருடன் கலந்துரையாடினார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம், ஊற்றுப்புலம் ஆகிய கிராமங்களுக்கு நேரில் சென்று நிலமைகளை அவதானித்தார்.

அத்துடன் சுகாதார சேவையின் களப்பணி உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அண்மைய நாள்களில் கிளிநொச்சி மாவட்டம் எதிர்கொண்ட இயற்கைச் சவால்களின்போது மக்களுக்கு களப்பணி உத்தியோகத்தர்கள் ஆற்றிய உதவிகளுக்கு சுகாதார அமைச்சின் சார்பில் தனது நன்றிகளையும் பாராட்டுகளையும் அவர் தெரிவித்தார். (ம-70)

## எங்கும் சமய வழிபாடுகளைச் செய்யலாம் ஆனால் மத நிந்தனையில் ஈடுபட முடியாது

*இப்படிக் கூறுகின்றார் பாதுகாப்புச் செயலாளர்*

எந்த ஒரு நபருக்கும் வடக்கு மற்றும் கிழக்கில் சமய வழிபாடுகளிலோ அல்லது சுற்றுலா நடவடிக்கைகளிலோ ஈடுபட சகல உரிமையும் உள்ளதாகவும் எனினும் மத நிந்தனைகளில் ஈடுபடுவதாகக் கூறி அங்குள்ள மக்களை பழிவாங்கவோ அல்லது குழப்பங்களை ஏற்படுத்தவோ முனைவது தவறான விடயம் எனவும் இத்தகைய பௌத்த அமைப்புக்களின் செயற்பாடு தவறானது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அனைத்துத் தரப்பினரையும் பிரதிபலிக்கும் விடயங்களை உள்ளடக்கிய தேசியக் கொடிக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதையும் மீறி மங்களராமய விகாராதிபதி வண. அம்பிட்டியே சுமணரத்ன தேரர் மற்றும் பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசாரதேரர் தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளமை மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

சிங்களவர்கள் வடக்கில் அச்சமின்றிச் செயற்படவும் அதேபோல் தமிழர்கள் தெற்கில் அச்சமின்றிச் செயற்படவும், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர் மற்றும் ஏனைய நபர்கள் தடைகள் இன்றித் தமது மத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் மத அனுஷ்டானங்கள் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது எனவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## வலி.தென்மேற்கில் ஒரு வாரத்தில் 32 பேருக்கு டெங்கு நோய்

*தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்*



மானிப்பாய், டிசெ.06

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் ஒரு வாரத்தில் மட்டும் 32 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. இதையடுத்து, இந் நோய் மேலும் பரவவிடாமல் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் புகையூட்டல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஆனைக்கோட்டை, உயரப்புலம், மானிப்பாய், சாவல்கட்டு ஆகிய இடங்களிலேயே அதிக நோயாளர் இனங்காணப்பட்டனர். இதனையடுத்து சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொலிஸ், கிராம உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச்சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரசாரத்தில் ஈடுபட்டனர். அத்துடன் புகையூட்டல் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளனர். புகையூட்டலுக்குத்தேவையானஎரிபொருளை வலி.தென் மேற்கு பிரதேசசபை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-59)

காலைக்கதிர்
Kalaikkathir

## ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக் கப்பட்ட அதே ராஜாஜி மண்டபத்தில் ஜெயலலிதாவின் பூத வுடலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அப்பலோ மருத்துவமனையில் கடந்த 73 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த ஜெயலலிதாவுக்கு ஞாயிறு மாலை இருதய செயலிழப்பு ஏற்பட்டது.

அவரது உயிரைத்தக்க வைப்பதற்கு மருத்துவர்கள் கடும் போராட்டம் நடத்தினர். உலகின் மிக உயர்ந்த முறை சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும் அவை எவையுமே பயனளிக்கவில்லை. நேற்று நள்ளிரவு அவர் காலமானார்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த லண்டன் மருத்துவர் ரிச்சார்ட் பீல், ஜெயலலிதாவின் உடல் நிலைமை குறித்து நேற்றுப் பகல் தெரிவித்தமை வருமாறு:-

“சிகிச்சைக்கு ஜெயலலிதா நன்றாக ஒத்துழைப்பு வழங்கி வந்தார். எனினும் ஞாயிறன்று மாலை ஏற்பட்ட இருதய செயலிழப்பு கவலைக்கிடமான நிலைமையை ஏற்படுத்திவிட்டது.

“அப்பலோ மருத்துவமனையுடன் சேர்ந்து நானும் அவரின் உடல்நிலையைக் கவனித்து வந்தேன். அவர் சிகிச்சை தக்க எதிர்வினை தந்தமை எமக்கு ஊக்கமளிப்பதாவே இருந்தது. அவர் நன்றாக முன்னேறி வந்தார்.

“ஆனால் பின்னர் நிலைமை மிக மிக மோசமானதாக மாறிவிட்டது. எனினும் முடிந்த வரை அவர் இந்தச் சிக்கலான சூழலில் இருந்து மீள அனைத்து சிகிச்சைகளும் கொடுக்கப்பட்டன என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

“உலகில் மிக உயர்ந்த நிபுணத்துவம் வாய்ந்த, பன்முனை குழுவால் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

“சர்வதேச ரீதியில் கொடுக்கப்படும் அனைத்து உயர்தர சிகிச்சைகளும் அப்பலோவில் இருந்தது. ‘இ.சி.எம்.ஓ.’ என்னும் இதயம் மற்றும் நுரையீரல் அவயவங்கள் முழுமையாகச் செயற்படாத நிலையில், வெளியில் செயற்கையான கருவி மூலம் இரத்தத்தை சுத்திகரித்து ஒட்சிசனை உடலுக்குள் செலுத் துவதற்கான மருத்துவ முறை அவருக்கு அளிக்கப்பட்டது.

“அதுதான் அதிநவீன சிகிச்சை உலகின் எந்தவொரு சிறந்த மருத்துவமனையும் கொடுத்திருக்கக் கூடிய உயர்ந்தபட்ச சிகிச்சை தான் அது.

“இந்தத் தொழில்நுட்பம் சென்னை அப்பலோவில் இருப்பது அதன் நவீனத்துவத்தைக் காட்டுகிறது.

“உலகத்தில் எந்த ஒரு பகுதிக்கும் நிகராக அப்பலோ மற்றும் எய்ம்ஸ் மருத்துவமனையால், சிறந்த சிகிச்சை ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்டது” - என்றார்.

செயலிழப்புக்கு உள்ளான அவரது இருதயத்தின் பணி வெளியில் பொருத்தப்பட்டுள்ள கருவியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது என்றும் அச்சமயம் - அவரது இருதய செயலிழப் புக்கு காரணமெனக் கருதப்படும் - இருதயக் குருதிக் குழாய்களின் அடைப்புகள் ‘ஆஞ்சியோ’ முறையில் அடைப்பு நீக்கம் செய்யும் முயற்சி நேற்று பகல் முன்னெடுக்கப்பட்டது என்றும் - மேலும் கூறப்பட்டது

ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட மாரடைப்பு குறித்து டாக்டர்கள் விளக்கம் அளிக்கையில் -

மாரடைப்பு என்று பொதுவாகச் சொன்னாலும் இப்பிரச்சினை ‘ஹார்ட் அட்டாக்’ மற்றும் ‘கார்டியாக் அரெஸ்ட்’ எனப் பிரித்துச் சொல்ல வேண்டும். ‘ஹார்ட் அட்டாக்’ என்பது , இருதயத்துக்குச் செல்லும் இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு, அதனால் இதயத்துக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைந்து, இருதயத் துடிப்பில் பாதிப்பை ஏற்படுத்துவது. ஆனால், அப்பலோ மருத்துவ மனை நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘கார்டியாக் அரெஸ்ட்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘கார்டியாக் அரெஸ்ட்’ என்பது இருதயம் முழுமையாகச் செயற்பாட்டை இழந்துவிடுவதாகும். - என்றனர் டாக்டர்கள்.

## செத்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதறி அழுதனர். சென்னை எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. தமிழகமே நெருக்கடியில் மூழ்கியது.

சென்னையில் செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க. தலைமையத்தில் பறந்து கொண்டிருந்த கட்சியின் இரட்டை இலைச் சின்னம் பொறித்த கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

எனினும், அவ்வேளையில் தவறான அச்செய்தியைப் புரிந்துகொண்ட அப்பலோ மருத்துவ மனை நிர்வாகம், தமிழக முதல்வரின் உடல் நிலையை விளக்கும் அறிக்கைகயை மாலையில் விரைந்து உடனடியாக வெளியிட்டு, ஜெயலலிதா மரணமடைந்த செய்தியை மறுத்தது.

இதையடுத்து அ.தி.மு.க. தலைமையத்தில் அரைக் கம்பத்திற்கு இறக்கப்பட்டிருந்த கட்சிக் கொடி மீண்டும் முழு உயரத் திற்குப் பறக்கவிடப்பட்டது.

எனினும் நேற்றிரவு 11.30 மணியளவில் ஜெயலலிதா காலமான பின்னரும் அச்செய்தியை அறிவிப்பதில் ஊடகங்கள் அதிகம் தாமதம் காட்டின.

ஜெயலலிதாவின் பூதவுடலை மருத்துவமனையிலிருந்து எடுத்துச் செல்வதற்கான வாகனத் தொடரணி மருத்துவமனைக்கு வந்த பின்னரும் கூட, அவர் மரணமான செய்தியை வெளியிட தொலைக்காட்சி ஊடகங்கள் பின்னடித்தன. இன்னொரு தடவை தவறிழைத்து விடக்கூடாது என்று அவை மிகச் சிரத்தையாக இருந்தன.

இன்று அதிகாலை 12 மணிக் குப் பின்னர், ஜெயலலிதா மரணம் பற்றிய செய்தியை அப்பலோ மருத்துவமனை உத்தி யோகபூர்வமாக வெளியிட்ட பின்னரே அது பற்றிய அறிவிப்பை ஊடகங்கள் வெளியிட் டன. (உ)

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவை காப்பாற்ற முடியாமல்போனது ஏன்?

### *அப்பலோ மருத்துவமனை விளக்கம்*

தமிழக முதல்வர் ஜெயலலிதாவைக் காப்பாற்றக் கடுமையான முயற்சிகளை மேற் கொண்டும் அவரைக் காப்பாற்ற முடியாமல்போனது ஏன் என்பது குறித்து அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் மருத்துவ அறிக்கையில் விளக்கமளித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்துக் குறைவு காரணமாக சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார்.

பலமுனை சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பிறகு மெதுவாக அவர் குணமடைந்து, வாய் மூலம் உணவு சாப்பிடும் அளவுக்கு முன்னேறினார். அதையடுத்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து முக்கிய கண்காணிப்பு மையத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு நிபுணர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

நிபுணர்கள் இருக்கும்போதே, டிசெம்பர் 4 ஆம் திகதி மாலை ஜெயலலிதாவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அவருக்கு மீண்டும் உயிர்ப்பிப்பு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சர்வதேச அளவில் அளிக்கப்படும் நவீன ஹளக்மோ எனப்படும் அதி உயர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதாவது, நுரையீரல் மற்றும் இதயம் முழுமையாக செயல்படாதபோது, அந்தக் கருவியின் உதவியால் ரத்தம் சுத்திகரிக்கப்பட்டு, ஆக்ஸிஜன் உள்ளே அனுப்பப்படும். ஆனால், அவயங்களை முழுமையாக செயல்பட வைக்க நிபுணர்கள் தீவிர முயற்சி செய்த போதிலும், ஜெயலலிதாவின் உடல்நிலை அதை ஏற்கும் அளவுக்கு இல்லாத சூழ்நிலையில் டிசம்பர் 5 ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு அவர் காலமாகிவிட்டார். - என அப்பலோ மருத்துவமனை தெரிவித்துள்ளது.

முதல்வரைக் காப்பாற்ற அப்பலோ மருத்துவமனை மருத் துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினரும் முயற்சி செய்த போதிலும் அது முடியாமல் போனது என அப்பலோ வருத்தம் தெரிவித்துள்ளது. முதல்வரின் மறைவுக்கு பொதுமக்களுடன் இணைந்து தாங்களும் இரங்கல் தெரிவிப்பதாக அப்பலோ மருத்துவமனை செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. (ம)

## பாதுகாப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் பிற முக்கிய நகரங்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கின்றனர். பொலிஸாரின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள் ளன. பிற பொலிஸ் பணிகளை இடைநிறுத்திவிட்டு, காவல் கட மையில் மும்முரமாக ஈடுபடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு சீர்கெட்டால் நிலைமையை சமாளிக்கும் ஏற்பாடாக றிசேர்வ் படையினரும் உஷார் நிலையிலும் வைக்கப் பட்டுள்ளன.

மாநில உளவுப்பிரிவு, பொருளாதாரக் குற்றப்பிரிவு, காவல்துறையின் கூடுதல் நடவடிக்கைப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த சகல பொலிஸாரையும் காவல் துறைக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கான உத்தரவும் வழங்கப்பட்டிருக்கின்றது.

## பன்னீர்ச்செல்வம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் - பெரும்பாலும் அனைவரும் - கலந்து கொண்டனர்.

இதுவரை தமிழக நிதி அமைச்சராகப் பணிபுரிந்து வந்த ஓ.பன்னீர்ச்செல்வத்தை சட்ட மன்றக் குழுத்தலைவராகத் தெரிவு செய்யும் தீர்மானம் அங்கு ஒரு சில நிமிட நேரத்துக்குள்ளேயே ஏக மனதாக எடுக்கப்பட்டதாகத் தெரியவந்தது. ஆளுநர் வித்யாசாகர் ராவ் முன்னிலையில் அவரும் அவரது 31 பேரைக் கொண்ட அமைச்சரவையும் இன்று அதிகாலையில் பதவியேற்றது. (உ)


NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
NALIN Information Technologies(Pvt)Ltd.

மதிப்பு மிக்க வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு

HP நிறுவனத்தின் வட மாகாண உத்தியோகபூர்வ வியாபார பங்காளராகிய நாம் இனிவரும் காலங்களில் Hp நிறுவனத்தின் உற்பத்திகளான மடிக்கணனிகள் (Laptop), மேசைக்கணனிகள் (Desktop), அச்சுப்பொறிகள் (Printer) என்பனவற்றை 1 முதல் 3 வருட உத்தரவாதத்துடன் வழங்கவுள்ளதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அத்துடன் HP நிறுவனத்தின் மடிக்கணனிகள், மேசைக்கணனிகள், அச்சுப்பொறிகள் ஆகியவற்றின் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்குட்பட்டது

HP உற்பத்திப்பொருட்கள் தொடர்பான தரமான விற்பனையும் அதன் பின்னரான சிறந்த சேவையையும் தரமாக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நளின் நிறுவனம் பெருமையடைகின்றது.

போலியான முகவர்கள் குறித்து அவதானத்துடன் இருக்கவும்.

இது ஒரு வியாபார மேம்படுத்தலுக்கான அறிவித்தல்

No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.



hp AWARD - 2016
BEST EMERGING RETAIL PARTNER






Thank You
For Your Support
Customers, Staff, Distributors & HP Team.
NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.